# மாவை முருகன் கவிப்பூங்கொத்து

2.379

A.T.R. 399

2.399



# மாவை முருகன் கவிப்பூங்கொத்து

*பதிப்பாசிரியர் :*
பண்டிதர் சி. அப்புத்துரை

*துணைப் பதிப்பாசிரியர் :*
மயிலங்கூடலூர் பி. நடராசன்

முதற் பதிப்பு:
1977-01-01.

பதிப்பாசிரியர்:
சி. அப்புத்துரை,
மயிலங்கூடல்,
இளவாலை.

துணைப் பதிப்பாசிரியர்:
மயிலங்கூடலூர் பி. நடராசன்

MAVAI MURUGAN KAVIPOONGKOTHTHU
— a Collection of hymns on Mavai Murugan

*Published by:*
S. APPUDURAI,
Mailangoodal,
Ilavalai.

*Assistant Editor :*



திருவாட்டி

**சிறீரங்கம் சின்னத்தங்கம்**

தோற்றம் : 1895 - 10 - 05

மறைவு : 1976 - 01 - 14

மாவை ஆதீனகர்த்தர்

## பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக்குருக்கள்

வழங்கிய

# ஆசியுரை

மாவை முருகன் ஆலயம் வரலாற்றுப் பெருமையும் பழமையும் புகழும் வாய்ந்தது. கலியுக வரதனுகிய மாவை முருகனின் திருவருள் நோக்கினுற் பெரும்பேறடைந்தோர் மிகப் பலராவர். அவர்களுட் சிலர் தமது தெய்வீக அநுபவங்களைத் தீந்தமிழ்ப் பாடல் மாலைகளாக வெளிப்படுத்தினர். அவற்றுட் பலவற்றைத் தொகுத்து மாவை முருகன் கவிப்பூங்கொத்து என்னும் பெயரோடு திரு. சி. அப்புத்துரை அவர்கள் வெளியிடுவது வரவேற்கத் தகுந்தது. ஏட்டில் உள்ளவையும் பல ஆண்டுகளுக்கு முன் அச்சில் வெளிவந்தவையும் அழிந்துபடக்கூடாது; பொதுமக்களின் பராயணத்துக்குரியனவாகவேண்டும் என்னும் பெருநோக்குடன் இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம் முன்னேடி முயற்சியைத் தொடர்ந்து மாவை முருகன் பற்றிய பிற நூல்களும் அச்சிடப்படவேண்டும் என்பது எமது ஆவல்.

மாவை முருகன் அருள் நிறையப்பெற்று இம் முயற்சி மேலுந் தொடர எனது வாழ்த்துக்கள் உரியன.

மாவிட்டபுரம்
தெல்லிப்பழை

சு. துரைசாமிக்குருக்கள்
ஆதீனகர்த்தரும் தலைமைக் குருவும்

சிவாகமவித்தியாபூஷணம்

## பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள்

வழங்கிய

# ஆசியுரை

காலனர் வருதல் கண்டு கலங்கிடும் போது மாவை
வேலனே யென்று உன்னை விருப்பொடு அழைப்பேன் நீயும்
கோலமா மஞ்ஞை மீது குலவிட வந்து காட்சி
ஞாலமீ தெனக்குத் தந்து நல்லருள் புரிகு வாயே.

உலகில் எவருக்கும் சிறப்பு உண்டு. இறக்குமுன் இறைவனை வேண்டி, நல்லவை நினைந்து, நல்லவை செய்தல்வேண்டும். இயம பயம் பொல்லாதது. அதனில் இருந்து விடுபடவேண்டும். கண் கண்ட கலியுகக் கடவுள் முருகன். முருகன் துணை இயம பயத்தை நீக்கிவிடும். எனவே, முருகனைப் போற்றி ஏற்ற தருமம் புரிதலே சாலச் சிறந்த செயலாகும். மாவை முருகன் மெய்யடியார்களுக்கு ஆனந்தக் காட்சி கொடுத்து அருள்பாலித்து நிற்கின்றான்.

மாவை முருகனை நினைப்பதற்குப் பெரியார்கள் பலர் செய்த நற்பாடல்களைத் தொகுத்து மயிலங்கூடலூர் ஸ்ரீமதி சின்னத்தங்கம் சிறீரங்கம் நினைவு வெளியீடாக மாவை முருகன் கவிப்பூங்கொத்து என்ற நூல் வெளியிடப்படுகிறது.

அடியார்கள் பாடி அருள்பெற்று உய்வதற்கு வழிவகுத்த மைக்கு எமது வாழ்த்து.

மாவை தேவஸ்தானம்
தெல்லிப்பழை

சு. து. ஷண்முகநாதக்குருக்கள்

தமிழ்ப்பேரறிஞர்
பண்டிதமணி, வித்துவான்,
## ந. சுப்பையபிள்ளை
அவர்கள் வழங்கிய
# • புனைந்துரை

மாவை முருகன் கவிப்பூங்கொத்து என்னும் தொகுப்பு நூலின் அச்சிட்ட பிரதியொன்று எமது பார்வைக்கு வழங்கப்பெற்றேம். அதன் முதலாம் பகுதியிலே ஐந்து புலவர்கள் பாடிய பதிகங்களாகிய பிரபந்தங்கள் ஐந்தும், வேறு புலவர்கள் பாடிய ஏனைப் பிரபந்தங்கள் மூன்றும் பூரணத்துவத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியிலே வெவ்வேறு புலவராற் பாடப்பட்ட பன்னிரு நூல்களிற் சிற்சில பாடல்கள் மாதிரியறியச் சேர்க்கப்பட்டுள.

அவற்றுள், இன்னும் அச்சில் வெளிவராதவை மாவைக் குருமணி திரு. சா. குமாரசுவாமிக்குருக்கள் இயற்றிய மாவைப் புராணமும் பண்டிதர், கலைமாணி, திரு. மு கந்தையா அவர்கள் இயற்றிய மாவைப் பள்ளுமாம். அவை விரைவில் வெளிவரும்படி சைவசமய அபிமானிகளும் தமிழபிமானிகளும் தனிப்பட்ட முறையிலாவது கூட்டுறவு முயற்சியிலாவது உழைத்து வெளியிடுதல் நன்று; திரு. பூ. பொன்னம்பலபிள்ளையியற்றிய மாவை யமகவந்தாதி நூல் நாரிகேள பாக நடையுடையதாய் இலகுவில் பொருள் விளங்க இயலாத முறையிலுள்ளது. 'அது திரு. ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் உரையுடன் வெளிவரும்' என்று இந் நூலில் அப் பாடல்களின் அடிக்குறிப்பிற் குறிக்கப்பட்டுள்ளது; இம் மூன்றும் விரைவில் வெளிவந்து உலகிற்கு உபயோகமாகும்படி மாவை முருகன் அருள்புரியும்படி வேண்டுகின்றேம்.

மாவையம்பதியின் மூர்த்தி தலந் தீர்த்த மகிமை விசேடங்களை நன்கு அறியாத மாந்தரும் இளைஞரும் உணரும்படி அறிமுகஞ்செய்து நன்கறியத் தூண்டி வெளிவரும் பூங்கொத்தாக இந்நூல் நின்று நிலவும் என்பது எமது கருத்து.

மன்னி வாழி மாவை முருகன் கவிப்பூங்கொத்து!
தன் அடிக் குறிப் பதனிவிதன் விவரமுந் தந்தாக்கியோன்
வாழி! வாழி யினிதே.

465/1, காங்கேசன்துறை வீதி — வித்துவான் ந. சுப்பையபிள்ளை
யாழ்ப்பாணம்
10-10-1976

வித்துசிரோமணி
சி. கணேசையரின்
மாணவரும்
தமிழறிஞருமாகிய
**பண்டிதர் இ. நமசிவாயம்**
*அவர்கள் வழங்கிய*

# வாழ்த்துரை

திருமருவு மாவையம் பதியினிற் கோவில்கொள்
செய்யவேல் முருகவேட்குச்
செந்தமிழ்ப் பாவலர் பற்பலர் அன்பினுற்
செய்தபிர பந்தமெல்லாம்
பெருமுயல்வி னென்றுசேர்த் தமரருல குற்றதன்
பெற்றதாய் நினைவுநூலாய்ப்
பேணியச் சேற்றியில வசமாக ஈந்தனன்
பேருலகு மகிழ்வினேற்க
மருவுபுகழ் நகுலகிரி யருகிலுறு இன்றசீர்
மன்னுமயி லங்கூடலூர்
மாட்சிபெறு பண்டிதன் அப்புத்து ரைப்பெயர்
வாய்த்தஉயர் தலைமையாசான்
அருமையுறு மிச்சேவை உலகினர்க் ககவிருள்
அகலவருள் ஒளிதழைக்க
ஆயவழி காட்டியாய்ப் பல்லாண்டு நிலைபெறுக
ஆறுமுக னருளினுலே.

மயிலிட்டி தெற்கு — இ. நமசிவாயம்
*21-11-76*

## பதிப்புரை

இறையடி நீழலுற்ற எம் அன்னையாரின் நினைவு நிலைபெற இறையருள் பெற்ற சான்றோரின் நூலொன்று வெளியிடுதல் வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. பல கருத்துக்கள் உள்ளத்தில் தோன்றின. இறுதியில் மாவை முருகன் புகழ்பாடுங் கவிப்பூங்கொத்து ஒன்றை மலரவிடுதல் தகும் என்ற எண்ணம் நிலைபெற்றது.

மாவை முருகன் புகழ்பாடும் ஒரு சில நூல்களைப்பற்றியே அறிந்திருந்தமையால் 'கனமான' நூலொன்றை வெளியிட முடியுமா? என்ற ஐயம் எழுந்தது. 'முயற்சி தன் மெய்வருந்தக்கூலி தரும்' என்ற பொய்யாமொழியைத் துணையாகக் கொண்டு நூல் வேட்டையில் இறங்கினோம். நீண்டு பரந்து விரிந்துகிடக்கும் கடற்கரையிலே எல்லையின்றி நிறைந்து கிடக்கும் கிளிஞ்சல்கள் நடுவே எதனைப் பொறுக்கியெடுப்பது என்று தெரியாது மலைத்து நிற்கும் சிறுவனின் நிலை எமக்கு ஏற்பட்டது. பலர் எமது முயற்சியை வாழ்த்தி நூல்களையும் ஏடுகளையும் தந்தனர். இவர்களுக்கிடையே ஆடிப்பெருக்கிலே அருந்தமிழ் நூல்களை இட்டு மகிழ்ந்த தமிழர் பரம்பரையிலே வந்த மருத்துவத்துறைப் பேராசிரியர் ஒருவரையும் சந்திக்க முருகன் அருள்பாலித்தான். மாவை முருகன் புகழ்பாடும் பல நூல்கள் தம்மிடம் இருப்பதாகவும் அவற்றை எரியூட்டி அச்சில் வராது தடுப்பதற்காகத் தொகுத்து வைத்திருப்பதாகவும் அப் பெருமகனார் பேசினார். குறிஞ்சிக் குமரனின் மெய்யடியாரென்று மேன்மை உரைக்கும் அவரைக் குமரன் நல்லாற்றுப்படுத்தவேண்டுமென்று இறைஞ்சுகிறோம்.

இந் நிகழ்வு மாவை முருகன் பற்றிய நூல்களின் நிறைவான பட்டியலொன்றை ஆக்கும் மன உறுதியை எமக்கு நல்கியது. பலரின் துணையோடு பட்டியலொன்றை வெளியிடுகிறோம். இதனை விரிவுபடுத்தல் அறிஞர் கடனாகும்.

மாவை முருகன் பற்றி பல நூல்கள் இதனைத் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்பது எமது பேராவல். மாவை ஆதீனத்தினரும் மாவை முருகன் அடியார்களும் இப் பணியில் ஈடுபட்டு உழைக்க வேண்டும் என விழைகிறோம்.

இந் நூலுக்கு ஆசியுரை வழங்கிய மாவை ஆதீனகர்த்தா அமரர் பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக்குருக்கள், பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள், புனைந்துரையும் குறிப்புரையும் வழங்கிய தமிழ்ப் பேரறிஞர், வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்கள், வாழ்த்துரை வழங்கிய பண்டிதர் இ. நமசிவாயம் ஆகியோருடைய பேரன்புக்கு எமது நன்றி உரியது.

நூற்பிரதிகளையும் ஏட்டுப் பிரதிகளையும் குறிப்புக்களையும் பார்வையிடவுதவிய இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக நூலகத்தினருக்கு, சிறப்பாகத் துணை நூலகர் ஆ. சிவநேசச்செல்வன் அவர்களுக்கு எமது நன்றி. நூற் பிரதிகளை வழங்கியோரையும் பிற வகையில் உதவினோரையும் நூலில் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளோம். அவர்களுக்கும் எமது நன்றி.

இந் நூலை அழகிய முறையில் அச்சிட்டு வழங்கிய குகன் அச்சகத்தினர்க்கும் அட்டையைப் பொலிவுறப் பதித்துத் தந்த திருமகள் அழுத்தகத்தினர்க்கும் எமது நன்றி உரியது.

சி. அப்புத்துரை
பதிப்பாசிரியர்

1977-01-01

# பொருளடக்கம்

## பகுதி I

பதிகங்கள்

1. அ. குமாரசுவாமிப்புலவர்
7. க. சோமசுந்தரப்புலவர்
14. க. சரவணமுத்துப்பிள்ளை
20. க. மயில்வாகனப்புலவர்
26. வே. அப்பாக்குட்டி

அகவல்கள்

32. க. மயில்வாகனப்புலவர்
41. முருகேசர் கனகசபை

இரட்டைமணிமாலை

44. அ. குமாரசுவாமிப்புலவர்

## பகுதி II

மும்மணிமாலை

49. செவ்வந்திநாததேசிகர்

அந்தாதிகள்

51. சபாபதிநாவலர்
52. பூ. பொன்னம்பலபிள்ளை

புராணம்

53. சா. குமாரசுவாமிக்குருக்கள்

தோத்திரப் பாமாலை

55. பொ. சபாபதிப்பிள்ளை

பதிகங்கள் 56. க. வேலுப்பிள்ளை
57. க. சரவணமுத்துப்பிள்ளை
மாவை முருகன் 58. க. சச்சிதானந்தன்
கீர்த்தனைகள் * 59. சி. வேலுப்பிள்ளை உபாத்தியாயர்
60. ந. சிவப்பிரகாசன்
நகுலமலைக் குறவஞ்சி 61. நா. விஸ்வநாதசாஸ்திரிகள்
மாவைப் பள்ளு 63. மு. கந்தையா
முத்தகபஞ்சவிஞ்சதி 65. முத்துக்குமாரகவிராயர்
மாவைப் பதிகம் 67. முருகேசர் கனகசபை
பின்னிணைப்பு i. 68.
பின்னிணைப்பு ii. 70.
பின்னிணைப்பு iii. 71.
பின்னிணைப்பு iv. 72.
கருத்துரைகள் 75.

# மாவைப் பதிகம்

சுன்னுகம்
அ. குமாரசுவாமிப்புலவர்

## காப்பு

வெண்பா

செந்திருவாழ் மாவைத் திருக்கோயில் வீற்றிருக்கும்
கந்தவேண் மேற்பதிகங் கட்டுரைக்க — வந்தனைசெ
யும்பருக்கு மிம்பருக்கு முற்றகுறை முற்றொழிக்குங்
கும்பமதத் தும்பிமுகன் காப்பு

---

ஆக்கம் – 1883. பதிப்புக்கள்: I – 1888, II – 1900, III – 1950. அச்சுப்பிரதியை வழங்கியவர் புலவர் புதல்வர், சுன்னுகம், புலவரகம், கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்.

பதிகம்: சிறு நூல் வகையைச் சார்ந்தது. நான்கடி முதல் எட்டடி வரையிலுள்ள வெண்பாவை முன்வைத்து ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம் ஆகிய செய்யுட்களால் பத்துப் பாட்டுக்களாலாயினும் இருபது பாட்டுக்களாலாயினும் பாடுவது. – [கலைக்களஞ்சியம் - தொகுதி : 6], (பன்னிருபாட்டியல் – இனவியல் : 197)

இப்பதிகம் ஆசிரியவிருத்தப் பாக்கள் பத்துக்கொண்டது.

## நூல்

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சீர்மேவு நவரத்ந சிங்கார கோலமிகு
செம்பொனின் மகுடமுடியுந்
திவ்விய குணங்களோ ராறுமாய் வீறுற்ற
செய்யமுக மூவிரண்டும்
ஏர்மேவு நீபமலர் மாலையொடு செச்சைமல
ரினமாலை புரளுமார்பும்
எழின்மேவு மகமேரு கிரிபோல நிலவுற்ற
வினையிலாப் புயமிராறுங்
கார்மேவு கடலிலெழு மலரிபோன் மயிலின்வரு
கனகமய மேனியோடு
கவின்மேவு மாண்டலைக்கொடியும்வேற்படையுமாய்க்
காட்சிதந் தருள்புரிகுவாய்
பார்மேவு பல்லுயிர்க் குயிராகி நிறைகின்ற
பாரமே சுரவடிவமே
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியில்வதி கந்தவேளே. (1)

சத்தியந னெறிவிட்ட தீயனேன் புரிவினைகள்
தக்கவா றளவைசெய்து
தலைவநீ கற்பித்த படியன்றி இடையொன்று
தமியேனை அடைவதில்லை
இத்துணி விருந்துமென் புத்திதிட மின்மையா
லெண்ணாத வெண்ணமெண்ணி
யாதுவரு மோவெனக் கருதிநித மேங்குவேன்
யாவுநீ யறிதிகண்டாய்
சக்திதர வோங்கார திவ்விய சடாக்கர
தமோகுணா தீதமுதலே
சரவணோற் பவசுர சகாயபரி சுத்தசிற்
சைதன்னிய ரூபவாழ்வே
பத்திசெயு மெய்யன்பர் சித்தமிசை குடிகொண்ட
பரிபூர ணானந்தமே
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியில்வதி கந்தவேளே. (2)

தராதலா திபராய்க் கராசலா திகளான
சதுரங்க சேனைசூழத்
தலைமைநிலை கூடினும் புலமைமிக நாடினுஞ்
சகதலம் பலவோடினும்
பராவுறூஉ நின்பாத பதுமமே சதமென்று
பற்றுவை யார்களாயின்
பண்டைவல் வினையேகி யண்டரண் டந்தொழும்
பரகதிக் குரியராகார்
சராசரா காரமே யானசத் தியநித்த
சச்சிதா நந்தமுதலே
தற்பரா சிற்பரா கற்பனா தீதனே
சகலலோ கைகநாதா
பராபரா காங்கெயா பாவகீ தேவகீ
பாலகோ பாலன்மருகா
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியில்வதி கந்தவேளே. (3)

ஆருயி ரெனப்படுந் தனிமையேன் கேவலத்
தாணவத் தான்மயங்கி
யாசைகொண் டுலைதல்கண் டறிவற்ற நிலைபெற்ற
அடிமையின் பாலிரங்கிப்
பேரருள் மிகப்புரிந் தாக்கையொடு போக்கியம்
பிறவுநீ சேர்க்கைசெய்து
பின்னரவை நீக்கியே மோக்கவழி யாக்கிடும்
பேறுதரு நோக்கமாகத்
தேருமோ ருருவிலா யாயினுங் கோயிலாய்ச்
செறிதலம் பலவமர்ந்தாய்
தேவனே நின்கோயில் நின்பாத நித்தமுந்
தெரிசனஞ் செய்யவைப்பாய்
பாருமாய் நீருமாய்த் தேயுவாய் வாயுவாய்ப்
பரவெளியு மானவொளியே
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியில்வதி கந்தவேளே. (4)

இச்சைக ளடக்கிலேன் கொச்சைகள் கடக்கிலேன்
ஏகசிவ யோகமார்க்கம்
ஏறிலேன் பெரியர்மொழி தேறிலேன் துதியெடுத்
தேத்திலேன் முறைகாத்திலேன்
நிச்சமும் பொய்ச்சமொழி கூறுவேன் சீறுவேன்
நியமநிலை மாறுவேனன்
னீதிமொழி மீறுவேன் சூதுமொழி வீறுவேன்
நீசனேனையு மாள்வையோ
விச்சுவா தீகனே செச்சையணி வாகனே
மேவிருமெல் லியர்பாகனே
வீரதர சிங்கார சூரகுல சங்கார
வேற்கரா புதபாற்கரா
பச்சைமா மயிலேறு சச்சிதா னந்தனே
பாகீர திக்குமகனே
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியில்வதி கந்தவேளே. (5)

பேரகங் கர்ரமோ டாருமீ தெனதெனப்
பேசுமம காரநீத்துப்
பேரின்ப மயமான கேவல சுகம்பெறும்
பெற்றியொரு சற்றுமின்றி
ஊரகந் தேடுவார் போரகஞ் சாடுவா
ரோடுவா ருடல்வாடுவார்
உலோபரைப் பாடுவார் மாதரைக் கூடுவார்
உண்மைநிலை யுணரமாட்டார்
சீரகங் கெழுதணிகை யேரகம் பழனிமலை
செறிபரங் குன்றுமுதலாந்
தேவால யந்தொண்ட ராவார் தமக்கெலாஞ்
சித்திதர நித்தமுறைவோய்
பாரகம் பரவுமுப காரகா தாரகப்
பதகனு ருயிர்மாரகா
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியில்வதி கந்தவேளே. (6)

நன்னிலை நிறுத்திலேன் புன்னிலை வெறுத்திலேன்
நகைமிகை பொறுத்திலேனு
ஞெனன தெனுஞ்செருக் காலதிக மோகமே
நண்ணுவேன் புகழெண்ணுவேன்
கன்னியர்க ளின்பமே மன்னியநன் னிலையென்று
காணுவேன் மயல்பூணுவேன்
கைப்பொருள் வரும்பொழுது மெய்ப்புள கரும்பு
கபடநா டகமாடுவேன் [வேன்
என்னிலையை யென்சொல்வே னைம்பொறியின் வழி
ஏழையேன் பாலிரங்கி [செல்வேன்
ஈசநின் பாதமற வாதவிசு வாசமே
எக்காலு நிற்கவருள்வாய்
பன்னிரு புயாசலா நின்மலா சின்மயா
பாவையுமை தருபாலகா
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியில்வதி கந்தவேளே. (7)

பிணியோடு பசிவறுமை சிறிதேனு மெனைவந்து
பீடித்த லின்மைவேண்டும்
பெருமநின் கதைகளைத் துதிகளைக் கேட்டுமகிழ்
பேறுமீந் தருளல்வேண்டும்
பணியே புரிந்துநினை நணியே வணங்குமொரு
பத்தியுந் தருதல்வேண்டும்
பாவியே னயினுந் தீயனேன் பாலருட்
பார்வைவைத் தாளவேண்டும்
கணியே யெனக்குறவர் வரைமே லுதித்தசக
காரணு பரிபூரணு
கானவர் கொடிக்குமுயர் வானவர் பிடிக்குமொரு
காந்தனே மலைவேந்தனே
பணியாத வர்க்குமரு டணியா தியானுனது
பாதமெப் போதுமறவேன்
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியில்வதி கந்தவேளே. (8)

நண்பே பொருந்துதவி முன்பே இகழ்ந்துபுவி
நண்ணும்விண் ணவர்கள்கோமான்
நற்கருணை பெற்றேற வற்புதா னந்தமாய்
நக்கனெற் றிக்கணுற்று
மண்பா லடைந்துமுறை யின்பா லமைந்துசெரு
மற்றிணை யிலாதியற்றி
மன்னுசூர் முதலான தானவர்கள் யாரையும்
மாய்வித்து வானவர்க்கு
விண்பேறு பெறவைத்த வன்பேறு செகதேக
வீரனே சுகுமாரனே
விக்கிரம வேல்கொண்டு நக்கீர னுயிர்காத்து
வேண்டுநல் லருள்புரிந்தோய்
பண்பேறு சுரகங்கை மலைகங்கை தரவந்த
பாலனே சயசீலனே
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியில்வதி கந்தவேளே. (9)

பைந்தொடி மடந்தையர்கள் தந்தசுக வின்பமே
பாங்குபெறு முத்தியென்னும்
பாவலோ காயதன் போலமங் கையர்கள்பாற்
பற்றுவைத் தலைவர்சில்லோர்
சந்ததமு நிலையென்று மண்பொனுக் காகவே
தமைமறந் தலைவர்சில்லோர்
சாராம லிவருறவு மேலான சுகவாழ்வு
தன்னையான் தேடவைப்பாய்
சுந்தமுறு நீபனே செந்திலூர் வாசனே
கந்தமா தனகிரீசா
கார்த்திகே யாவிசா காகுகா காங்கெயா
காஞ்சிமா வடியில்வாழ்வே
பந்தமற மெய்யடியர் வந்துதுதி செய்துயும்
படிவடிவு கோயில்கொண்டோய்
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியில்வதி கந்தவேளே. (10)

உ

# மாவைநகர் முருகவேள் பதிகம்

நவாலியூர்
க. சோமசுந்தரப்புலவர்

### காப்பு

வெண்பா

மன்னுமருள் கூர்மாவை வைவேற் பெருமான்மேற்
பன்னுந் தமிழ்ப்பதிகம் பாடவே — முன்னருளும்
அஞ்சக் கரத்தனுத வாதிமறை மாமுதல்வன்
பஞ்சக் கரத்தன் பதம்.

வந்திய் பவர்க்கருளும் மாவைவடி வேற்பெருமான்
சந்தத் தமிழ்ப்பதிகஞ் சாற்றவே — புந்திவரும்
முன்னுளிற் பொற்கூடல் முத்தமிழு மாய்ந்தகலைச்
சொன்னு யகிதாட் டுணை.

கண்ணுள் மணியே கருத்துட் கருத்தேயென்
புண்ணியமே ஞானப் பொலஞ்சுடரே — அண்ணலே
மாவைத் திருநகர்வாழ் வைவேற் பெருமான்மேற்
பாவைத் தருவாய் பரிந்து.

---

இப்பதிகம் இதுவரை நூலாக வெளிவரவில்லை; தினகரன் இதழ்களில் வெளி வந்தது. கையெழுத்துப் படியை வழங்கியவர் புலவரின் புதல்வர் இளமுருகனாரின் புதல்வர், வைத்தியகலாநிதி பா. சோ. பாரதி அவர்கள்.

இப்பதிகத்தில் மூன்று காப்பு வெண்பாக்கள் உள. பதிகத்தின் பதினோராம் பாடல் போற்றியாக அமைந்துளது.

## நூல்

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஓரா யிரங்கோடி கிரணசூ ரியரென்ன
வொளிகாலு மாறுமுகமும்
உயிர்கள்சஞ் சிதவினைக் கட்டறப் பார்க்கின்ற
ஒப்பில்பன்* னிருவிழிகளும்
காரா யிரம்புரையு மீராறு கைகளுங்
கனகதண் டைக்கால்களுங்
கன்னிமார் பாகமுங் கொண்டமங் கலஞான
காருண்ய வடிவமுடனே
ஆராத காதலுட னனுதினமு மனமுருகி
ஆறெழுத் தோதிமுன்னின்
றழுதழுது தொழுகின்ற பழவடியர் கண்குளிர
வஞ்சலென வருமுருகனே
வாராத சித்தியருள் பேராயிரங் கொண்ட
வள்ளலே மாவைநகர்வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. (1)

திங்களணி செஞ்சடைச் சங்கரன் நுதல்விழிச்
செங்கனலி லேபிறந்து
தெய்வசர வணமணிப் பொய்கைதனி லோராறு
சிறுவர்வடி வாய்வளர்ந்தே
அங்கணுறை யோராறு மங்கைமார் கொங்கைதரு
மமுதுண்டு விளையாடியே
ஆறுதிரு முகமுமீ ராறுசெங் கரமுமா
யருளுருக் கொண்டமுருகா
செங்கணரி யும்மலர்ப் புங்கவனு மிந்திரனுந்
தேவர்குழு வும்வேண்டிடத்
திண்டிறல் மிகுஞ்சூர பன்மனைக் கொன்றமரர்
சிறைவிடுத் திடுகுமரனே
மங்கல வளம்பெருகி யெங்குமிசை பொங்கிமிகு
மாவைநக ரதனில்வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. (2)

தேவாதி தேவனே யாதிமறை யடிமுடிகள்
    தெரியாத குருநாதனே
  செங்கடம் புங்குல்லை யுஞ்செச்சை மாலையுஞ்
    சேர்ந்தபன் னிருதோளனே
பாவாணர் தருகின்ற செந்தமிழ்த் தொடையமுது
    பருகுமா றிருகாதனே
  பக்தர்கள் வினைத்தொடர் பறுத்தவர்க் கினியவருள்
    பாலிக்கு மிருதாளனே
மூவாமு குந்தற்கு மருகனே யொருகைமா
    முகவனுக் கொருதுணைவனே
  மொய்ம்புடைய வாகுமுத லொன்பதின்மர் சூழ்ந்திடும்
    முதல்வனே யபயமபயம்
மாவான வடிவொழிய மாருதப் புரவீக
    வல்லிதரு மாவைநகர்வாழ்
  மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
    மயில்வா கனக்கடவுளே. (3)

ஏழைத் தொழும்பருக் கிக்கலி யுகத்திலே
    இனிமையுட னெதுவுமருளும்
  இரக்கமுள கடவுளுனை யன்றிவே றில்லையென்
    றேவரும் புகலுகின்றார்
தாளைக் கொடுத்தெனது சஞ்சலம் முழுவதுந்
    தவிர்த்தருள வேண்டுமென்றே
  சந்ததமு முளமுருக மந்திர நினைந்துவெகு
    தாழ்மையொடு நின்றிரந்தால்
நாளைக் கடத்திவந் திட்டதல் லாலுனது
    நல்லருள் கொடுத்ததில்லையே
  நல்லன் பிலானென்று தள்ளிவிட நீதியோ
    நாதனே யபயமபயம்
வாழைக் குலங்கமுகு தேமா வருக்கைமிகு
    மாவைநகர தனில்வாழும்
  மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
    மயில்வா கனக்கடவுளே. (4)

அத்தனே முப்பத்து முக்கோடி தேவர்க்கு
மாதியே வேதமுதலே
யறியாத மலரவன் சிரநடுங் கக்குட்டி
யாரருள் சுரந்தகுமரா
பத்திசெயு மடியருக் கெத்துயரு நீக்கிடும்
பரமகா ருண்யமுருகா
பசுருநால் வகையேழு பிறவிமிகு யோனியெண்
பத்துநூ ருயிரமதி
லெத்தனை தரம்பிறந் தேனிறந் தேனுேத
எண்ணுக் கணக்குமுண்டோ
இன்னுமுன் திருவருட் பேறுபெற வெண்ணுத
வேழைதனை யாள்வதெந்நாள்
வைத்தவா ரணமேவு கொடியனே யடியர்புகழ்
மாவைநக ரதனில்வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. (5)

வேருன பாவங்கள் செய்தபே ரென்னிலும்
மெய்ஞ்ஞான வள்ளலேயுன்
மேலான சந்நிதி யடைந்தபேர் தூயராய்
மிகுவாழ்வு பெறுவரென்கை
தேரு தெதிர்த்துமுன் மாருன சமர்செய்த
தீரமிகு சூரனுக்குந்
திருவடி பரித்திடும் பேறுதந் திடுமருட்
செய்கையா லினிதுணர்ந்தேம்
நீருடி மைந்தனே யாருன வக்கர
நிறைந்தவோங் காரவொளியே
நின்னடித் தொண்டுபுரி யேழையடி யேங்கட்கு
நீயிரங் காததென்னே
மாருத பிணிமாற்று நகுலமலை யருவிபுடை
மருவிடும் மாவைநகர்வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. (6)

கங்கைதரு மைந்தனே கார்த்திகைச் சிறுவனே
கானக் குறத்திகணவா
கற்புமலி தெய்வகுஞ் சரிகேள்வ னேயமரர்
கழலடி வணங்குமிறைவா
எங்குமுறை யாதியே யாவுமறி சோதியே
யாவர்க்கு மொருநீதியே
ஈராறு கையனே தாரேறு மெய்யனே
யென்னுயிர்க் கினியவுயிரே
சங்கமலி புலவனே சங்கரன் குரவனே
தமிழ்முனிக் கருள்தேசிகா
சரவண பவாயநம சரவண பவாயநம
சாமிநா னுனைநம்பினேன்
மங்கல நிறைந்தமறை யந்தணர் தினந்துதிசெய்
மாவைநக ரதனில்வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. (7)

தேமேவு நவரத்ன முடியழகு மோராறு
திருமுகக் கருணையழகுந்
தேனொழுகு தாமரைப் பூவென்ன வருளொழுகு
திருவிழியி ராறினழகும்
பூமேவு செம்பவள விதழழகு முத்துமணி
பூத்தபுன் னகையினழகும்
பொன்னகல மார்பழகு மின்னுகுண் டலநிரைப்
பொலிவழகு மாலையழகுங்
காமேவு பூங்குழற் கன்னிமா ரோரிருவர்
கட்டழகு மிட்டதண்டைக்
காலழகு மேழைநான் கண்குளிர வேகண்டு
களிகொள்வ தெக்காலமோ
மாமேவு வடிவொழிய மாருதப் புரவிக
வல்லிதரு மாவைநகர்வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. (8)

செம்பிற் களிம்பென்ன மருவுமா ணவமலச்
    சேட்டையா லறிவிழந்தே
  செய்வதுந் தவிர்வதுந் தெரியாம லலேயுநான்
    தீமைபல புரிதலியல்பே
வெம்புமம் மலமாயை கன்மத் தொடக்கிலா
    விமலநீ கருணையாலே
  மிகுபிழை பொறுத்துமே னெறிநாட்டி யாட்கொண்டு
    விடுவதுன் கடமையன்றோ
அம்புவி தனிற்கலி யுகத்திலே கண்கண்ட
    வற்புதக் கடவுணீயே
  ஆற்றமுடி யாததுய ராற்றியுன் பொன்னடி
    யடைக்கலங் காத்தருளுவாய்
  மன்பதைக் கருள்புரிய வென்றரு ளுருக்கொண்டு
    மாவைநக ரதனில்வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
    மயில்வா கனக்கடவுளே. (9)

பொய்யற்ற கீரனுக் கருளவில்லை யோதேவர்
    புன்மையை யழிக்கவில்லையோ
  பொன்னகர்க் கிறைவன்ம கன்கனவில் வந்தவன்
    போற்றவருள் புரியவில்லையோ
மையற் பெருங்கிரி துளைக்கவில்லை யோவேலை
    வற்றவே லேவவில்லையோ
  வாகுமுத லானவர்க் கருளவில்லை யோமுனிவர்
    மற்சவுரு மாற்றவில்லையோ
தையற்கொர் கரம்வளர வுதவவில்லை யோவூமை
    தமிழ்பாட வருளவில்லையோ
  தண்டமிழ்ப் புகழ்கூற வருணகிரி நாதனைச்
    சாவாது காக்கவில்லையோ
வையத் தெமக்கருளு வதுபெரிய வருமையோ
    மாவைநக ரதனில்வாழும்
  மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
    மயில்வா கனக்கடவுளே. (10)

கந்தநம வைத்துமுகர் தந்தமுரு கேசநம
கங்கைதரு மைந்தாநம
கார்த்திகே யாயநம பூத்திடுக டம்புபுனை
கனகமணி மார்பாநம
எந்தைநம வீரறு புயத்தநம மன்னுயிர்க்
கீசநம நேசாநம
இமையவர்கள் தலைவநம கன்னிமா ரிருவருக்
கினியமண வாளாநம
தந்தைநம சங்கரன் குரவநம வைங்கரன்
றம்பிநம நம்பிநமவோம்
சரவண பவாயநம சரவண பவாயநம
சாமியுன் னபயமபயம்
வந்தனைசெய் மாதவன் பூசித்த நகுலமலை
மருவுமுயர் மாவைநகர்வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. (11)



# மாவைப் பதிகம்

வருத்தலைவிளான்
க. சரவணமுத்துப்பிள்ளை

## காப்பு

வெண்பா

சீர்மாவை மேவுமருட் செங்கைவடி வேலனுக்குப்
பார்மே லொருபதிகம் பாடுவேன் — கார்மேவு
மஞ்சுகர முடையா னன்புடையர் நெஞ்சடைவான்
கஞ்சமலர்த் தாளிணைகள் காப்பு.

பதிப்புக்கள் : I - 1928, II - 1940, III - 1976.

நூலாசிரியரின் மனைவி, திருமதி ச. இளையபிள்ளை (மறைவு: 1975-12-25) நினைவாக வெளியிடப்பட்ட நினைவு மலரில் இதனோடு மாவைக் கதிர்காம வடிவேலர் பதிகம், சுப்பிரமணியரகவல், திருப்பரங்குன்றப் பதிகம் என்பனவும் உள்ளன.

அச்சிட்ட நூலை வழங்கியவர் புலவரின் மைந்தர், சட்டத்தரணி, வருத்தலை விளான், ச. குகபபெருமாள் அவர்கள்.

## நூல்

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்

உலகினி லுழன்றியான் படுகின்ற துயரங்க
ளொருகோடி யுண்டுமெய்யா
யுற்றதுணை நீயன்றி வேறில்லை யன்பனே
யுன்கழல்கள் போற்றிசெய்தே
னிலவுகாத் ததன்கனி யருந்துதற் கெண்ணியங்
கிருக்குமோர் கிள்ளைபோல
வெனதிதய மனுதினமு மிப்படி வருந்தவோ
வீசவுன் கிருபையிதுவோ
நிலவினொளி யெனவீசு கருணைபொழி கண்ணுடைய
நிமலனே நித்யவாழ்வே
நிர்க்குண பூரண வற்புதா னந்தனே
நிறைவான கிருபைமுகிலே
கலபமயின் மிசையேறி வந்தென்னை யாளுவாய்
கர்த்தனே யுமைமைந்தனே
காரண மாவைவா ழீஸ்வரா மந்த்ரவேல்
கைதனிற் கொண்டதேவே. (1)

பஞ்சமா பாதகம் வஞ்சகங் கொஞ்சமும்
பற்றின்றி யோடிவிடவும்
பற்றுள்ள தாய்தந்தை குருதெய்வ மிவர்களைப்
பக்தியொடு நேசிக்கவும்
நெஞ்சமிவ் வுலகினிற் சீவன்கள் பட்டுழலு
நெறிகண்டு நைந்துருகவும்
நின்பெருமை பேசிடுஞ் சங்கங்க ளங்கங்கு
நிலைபெற்று நீடிக்கவுஞ்
சஞ்சலம் தீரவே பரசமய நண்பருஞ்
சைவசித் தாந்தநெறியைச்
சரியாக வோர்ந்துமே மறுஜனன மெய்யென்று
சாதிப்ப தற்குமருள்வாய்
கஞ்சமல ரடிவள்ளி தெய்வானை காந்தனே
கர்த்தனே யுமைமைந்தனே
காரண மாவைவா ழீஸ்வரா மந்த்ரவேல்
கைதனிற் கொண்டதேவே. (2)

நிதியிலார்க் குணவில்லை யயலில்லை யினமில்லை
நேசமது தானுமில்லை
நீசனுக் கறிவுபொறை தயவாதி குணமெலா
நிலைத்திங்கு நிற்கமாட்டா
நதிகடல்கள் தாண்டியே நற்றலங் கட்கேகி
நம்பனருள் பெறவுமாட்டேன்
நாயேனை வாட்டுமிக் கொடியநோய் நீங்கநா
னன் மருந் தறியமாட்டேன்
பதியையா னடைவதற் கானபுண் ணியமோடு
பத்திபெற் றடியனுய்யப்
பாக்கியந் தருகவென் றோலமிட் டலறினேன்
பண்ணவா வெற்குவேறு
கதியில்லை மயிலேறி வந்தென்னை யாளுவாய்
கர்த்தனே யுமைமைந்தனே
காரணு மாவைவா ழீஸ்வரா மந்த்ரவேல்
கைதனிற் கொண்டதேவே. (3)

எந்தவூ ரெச்சாதி யெச்சமய மென்னினு
மேதுமொரு பேதமின்றி
யெவர்நீதி பக்திவிசு வாசமிவை யுடையரோ
வவரையே சிஷ்யராக்கிச்
சொந்தமாய்க் காத்தவர்க ணின்றொண்டு புரிதல்போற்
றொண்டர்தந் தொண்டனுகிச்
சுகவாழ் வவர்க்குமிக வேண்டியே யாநந்த
சுத்தநிலை காட்டுகுருவே
இந்தவே ழைக்கருள் சுரந்திட விரும்புவா
யெப்போது மடிமையென்றே
யின்றுனது பாதமலர் வந்துமிகு மன்பாக
வேத்திநின் றேதுதித்தேன்
கந்தகுக மயிலேறி வந்தென்னை யாளுவாய்
கர்த்தனே யுமைமந்தனே
காரணு மாவைவா ழீஸ்வரா மந்த்ரவேல்
கைதனிற் கொண்டதேவே. (4)

பெலமோடு தைரியங் குறையாத நற்சுகம்
 பெறவெனக் கருள்கிடைத்தாற்
பிணிவறுமை நீங்கிடுங் கருணைபொறை சேர்ந்திடும்
 புண்ணியஞ் செய்தல்கூடும்
நிலையான திடபக்தி யடியனுன் கொள்ளுவே
 னித்தமுன் சீரடிக்கே
நிறைவான பூசைசெப முதலான செய்துமே
 நின்றுதோத் திரமுரைப்பேன்
தலமூர்த்தி தீர்த்தமிவை தமியேன் வணங்கியித்
 தரணியோர் பெரிதுவக்குஞ்
சற்குருவை யண்டியான் முத்திநெறி கண்டிடச்
 சமயமிது வாகுமையா
கலபமயின் மிசையேறி வந்தென்னை யாளுவாய்
 கர்த்தனே யுமைமைந்தனே
காரணு மாவைவா ழீஸ்வரா மந்த்ரவேல்
 கைதனிற் கொண்டதேவே. (5)

அன்பில்லை யன்னையொடு தந்தைசோ தரமில்லை
 யயலில்லை யுறவின்முறையா
ராருமிலை யரியகுரு தானுமிலை நல்லகுண
 மறிவுபொறை யாதியெல்லா
மென்மனத் திடைநிற்க வல்லவோ வில்லையே
 யாதினிச் செய்வதென்றே
யெண்ணியென் னிருதயம் புண்ணாகி நோகுதே
 யேற்றவழி காட்டிவைப்பாய்
சொன்னதைச் சொன்னபடி செய்யென்று சொல்லினுஞ்
 சோருதே கன்மநெஞ்சஞ்
சொல்லாமல் விடவெனிற் பொல்லாமை செய்யுதே
 சோலியிது சோலியிதுகாண்
கன்மவினை நீக்கவே வந்தென்னை யாளுவாய்
 கர்த்தனே யுமைமைந்தனே
காரணு மாவைவா ழீஸ்வரா மந்த்ரவேல்
 கைதனிற் கொண்டதேவே. (6)

அன்பனே நீசரெனே வந்துவந் தணுப்பயா
　　னவர்களுரை மெய்ம்மையென்றே
　யறியாமை யானம்பி வெகுமோக மாகினே
　　ஞதலால் வந்தெனக்கு
முன்பிலே நின்றுனது கருணைபொழி கண்களும்
　　முகங்களோர் மூவிரண்டும்
　மும்மலங் களைநீக்கு முன்பாத தாமரையு
　　முந்நான்கு கைகளோடு
அன்பமையு முபதேச மிதுவேளை செய்தெனக்
　　கறியாமை நீங்கநல்ல
　வற்புதச் சமயமிது நிச்சயந் நம்பினே
　　னறிவுதரு மெய்த்தெய்வமே
கன்மவினை நீக்குபவ வந்தென்னை யாளுவாய்
　　கர்த்தனே யுமைமைந்தனே
　காரணு மாவைவா ழீஸ்வரா மந்த்ரவேல்
　　கைதனிற் கொண்டதேவே. (7)

மனமென்னு மலரிலே யுனையா னிருத்தியே
　　யன்பென்னு மந்நீரிலே
　மாறிமா றிப்பண்பி னபிடேக மதுசெய்ய
　　மற்றுமென் கண்கள்வழியாய்க்
கனதாரை தாரையாய் நீர்பெருகி வழியவுங்
　　கசிவுகொண் டெனதுதேகங்
　கடுவேர்வை கொள்ளவு மெய்ம்மறந் தயரவுங்
　　கன்மனங் கரைந்துருகவு
முனதுபத மேயெனக் குதவியென வென்பொரு
　　ளுடலாவி யாவுமீந்தே
　யொப்படைத் திடவுமுன் னருளெனக் கீகுவா
　　யோங்குமுயர் ஞானவொளியே
கனகமணி யணியுமொரு பாலசிவ சுந்தரா
　　கர்த்தனே யுமைமைந்தனே
　காரணு மாவைவா ழீஸ்வரா மந்த்ரவேல்
　　கைதனிற் கொண்டதேவே. (8)

உண்மையாய்ச் சமயங்க ளுன்னையே போற்றியுன்
னருள்பெறற் கர்னபலவு
மோதியே நல்லவழி காட்டிமெய்ஞ் ஞானரச
முலகினுக் கூட்டுமெனினும்
மண்ணுலகர் தமதறிவு கொண்டுதம் மிச்சைபோல்
மாற்றியே போதிப்பதால்
மானிடர்க் கறியாமை நீங்கிடுங் காலமினி
வருவதற் குறுதியுண்டோ
நுண்ணறிவு மெய்ஞ்ஞான மருள்தயவு பொறுமையிவை
நிறையவே பெற்றபெருமை
நீடித்த குருசர்வ சமயமா னிடர்க்குமுப
தேசமது செய்யவைப்பாய்
கண்ணற்கு மருகனே வந்தென்னை யாளுவாய்
கர்த்தனே யுமைமைந்தனே
காரணு மாவைவா ழீஸ்வரா மந்த்ரவேல்
கைதனிற் கொண்டதேவே. (9)

அந்தகன் வந்துயி ரலைக்கின்ற போதெனக்
காருதவி செய்யவருவா
ரையனே யுனையன்றி வேறெவரு மில்லையுன்
னடியிணைகள் போற்றிசெய்தேன்
சந்ததமும் வந்தெனக் குபதேச மதுசெய்வை
சச்சிதா நந்தமுதலே
சற்குணு நந்தனே யற்புதப் பிரமமே
சகலகலை யோதுகுருவே
விந்தையா யுயிர்களைக் காக்குமொரு தெய்வமே
வேதவடி வானபொருளே
விற்பன விலாசமே மெய்ஞ்ஞான பானுவே
விண்ணவர் துதிக்குமுதலே
கந்தகுக மயிலேறி வந்தென்னை யாளுவாய்
கர்த்தனே யுமைமைந்தனே
காரணு மாவைவா ழீஸ்வரா மந்த்ரவேல்
கைதனிற் கொண்டதேவே. (10)

உ

# மாவைப் பதிகம்

வருத்தலைவிளான்
க. மயில்வாகனப்புலவர்

## காப்பு

வெண்பா

*மூவெழுத்துப் பேர்ப்பொருளாய் முன்னகல வேபருவம்
மேவிடைபோய்த் தேன்கடைபோய் வேரிப்பே-ராவதடி
வாழ்மயிலை யைங்கரனை வாழ்த்தில்வரு மாவைநகர்
வாழ்குமர னற்பதிகம் மற்று.

---

*"மூவெழுத்துப் பேர்ப்பொருள் - என்றது 'மருது'. அது முதலெழுத்துக் கெட 'ருது' என்றும், இடையெழுத்துக் கெட 'மது' என்றும், கடையெழுத்துக் கெட 'மரு' என்றும் நின்று மேற்போந்த பொருள்களைத் தருதல் காண்க."
—ஆக்கியோன் குறிப்பு

இது வருத்தலைவிளான் (மயிலை) மருதடிவிநாயகர் மேலது.

முற்பதிப்பு - 1911. இப்பதிப்பில் துணைவைப் பதிகம், நல்லைப் பதிகம் என்பனவும் உள. இப் பதிகத்தின் படியை வழங்கியவர், புலவரின் தம்பி, க. சரவணமுத்துப்பிள்ளையின் (பக். 14) மகள், வருத்தலைவிளான், திருமதி தம்பியப்பா ஞானக்கநாயகி அவர்கள்.

## நூல்

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்

உலகெலாந் நொடியில்வரு சித்திரக் கலாபமயி
லூர்திமே லிவருமுருகா
ஓங்கலொடு சூரனுட னீங்குமா றுருவுமவ்
வுரவுவே லேந்துமுருகா
அலகிலா லீலையாற் கோன்மகளு மான்மகளு
மார்வமுற வைக்குமுருகா
அடுதிறற் கோழிநின் றோங்கிய விறற்கொடி
யதைத்தக வுயர்த்துமுருகா
நிலவுசீ ரீராறு திருவிழியு மருள்பொழிய
நின்றுறு வாயிடத்தும்
நிகழவே புன்முறுவல் செவிமடுத் தருள்வையோ
நீண்டவிண் ணப்பமிதனை
மலைவிலார் மலைமகட மைந்தனே கந்தனே
வாரண முகற்கிளையவா
மாவையம் பதியமல தேவருந் துதிகுமர
வள்ளலே ஞானவடிவே. (1)

ஊரின்றி யொருகுணங் குறியின்றி வினையின்றி
யோதிடும் பெயருமின்றி
உன்னவொரு சார்பின்றி முன்னின்றொடு பின்னின்றி
யுற்பத்தி நர்சமின்றி
நேரின்றி மேலின்றி யெப்படியு மளவிடா
நினையறிவி னுற்குறைந்த
நிலையினி லிருக்குநா மருடமைக் குறிகளா
னேமித்தி றைஞ்சல்கருதி
ஆர்கின்ற முற்றறிவு முதலாற ருட்குணனை
யாறுதலை யாக்கிவைத்து
அங்ஙனே மற்றைய குணங்களையு நற்குறிக
ளாலமைய வைத்துமதனுல்
வாரொன்று கொங்கைமட வார்கணவ நின்னையே
வந்தித்து மருளவேண்டும்
மாவையம் பதியமல தேவருந் துதிகுமர
வள்ளலே ஞானவடிவே. (2)

தேவநின் றிருவடிப் பெருமையும் மகிமையுஞ்
சிவபிரான் ரேள்களறியும்
செம்மைநிறை ஞானமுஞ் சாட்குண்ய பேதமுந்
திசைமுகன் றலைகளறியும்
மேவலர் துதிக்குநின் சௌரியமு மாண்மையும்
வெய்யசூ ரங்கையறியும்
மிளிர்கடைக் கண்ணருளு ஞானமுந் தீக்கையும்
வெற்பின்முனி நோக்கமறியும்
பூவலுறு பேரழகு நித்தநீ டிளமையும்
பூவாளி யங்கமறியும்
பொங்குபெரு வாழ்வுமா நந்தபோ கமும்புவி
புரப்பவன் சுதைகளறிவர்
மாவள ரருட்டிறமை தொண்டரறி வார்கொடிய
வன்னெஞ்சி னேனறிவெனோ
மாவையம் பதியமல தேவருந் துதிகுமர
வள்ளலே ஞானவடிவே. (3)

அத்தநீ யெந்நாளு மருள்பொழிந் தேவர்க்கு
மாநந்த போகமருளி
அழகில்வீற் றிருக்கவொரு திவ்விய க்ஷேத்திரமிங்
காக்கவெற் கருளவேண்டும்
பத்தியிற் சிரேட்டமுறு மாதவன் பத்திபோற்
பத்தியெற் கருளவேண்டும்
பத்தர்பல ரக்கோயி றன்னிடைக் குழுமியெப்
பாலுநின் றேத்தவேண்டும்
சுத்தமும் பத்தியுஞ் ஞானமும் வல்லகுரு
தொண்டங்கு செய்யவேண்டும்
தோமிலாச் செய்கையிவை பூரணப் படினெளிய
தொண்டரேம் வாழ்வுபெரிதே
மத்தியுறு சூரியர்கள் பல்கோடி போன்றொளி
வயங்குபொன் மேனியுடையாய்
மாவையம் பதியமல் தேவருந் துதிகுமர
வள்ளலே ஞானவடிவே. (4)

பொன்மழை பொழிந்தருள் சுரந்திடு திறத்துநற்
புட்கலா வர்த்தமெனவே
பொதியுமெய்ஞ் ஞானப்ர சங்கமழை யூற்றியிப்
புவியினுக் கீசனியல்பு
நன்முறை விளக்கியுப தேசமருள் சீலனை
நண்ணுநற் பதவிவாய்ந்து
நாடுமுயர் பத்தியைச் சாதனையி லும்வைத்து
நம்மவர்க ளுய்திபெறுவான்
வின்மலி சிறப்புடைச் சமயதா பனஞ்செயும்
விறல்கொளவ தாரபுருஷன்
வேண்டுமெங் குறையகல வுற்பவஞ் செய்யுமா
விடினினக் கென்னகுறைசீர்
மன்மலியு மாருதப் பிரவல்லி முன்னாள்
வயங்குபிர திஷ்டைசெய்த
மாவையம் பதியமல தேவரும் துதிகுமர
வள்ளலே ஞானவடிவே. (5)

பறையுமெய்ப் பதினெண்பு ராணத்தை யும்முனிவர்
பணியுஞான் றேதுகுருநீ
பரவுசீர்க் குறுமுனிக் கருளியே முடிமிசைப்
பாதம்வைத் திட்டகுருநீ
குறைவிலா முப்பத்து முக்கோடி தேவருங்
கும்பிட்டி றைஞ்சுகுருநீ
குடிலையின் பொருள்சொலாப் பிரமனைக் குட்டிமுற்
கொடியசிறை யிட்டகுருநீ
அறையுமவ் வகிலாண்ட கோடியும் பின்படைத்
தவனைமகிழ் வித்தகுருநீ
அமரர்முதல் யாவருந் துதிசெய்யு மீசற்கு
மக்குடிலை சொன்னகுருநீ
மறைமொழியு நன்னெறியி னெழுகிடச் செயவல்ல
வான்குரு வெனக்குமருளாய்
மாவையம் பதியமல தேவருந் துதிகுமர
வள்ளலே ஞானவடிவே. (6)

அண்டரை வருத்தியுக நூற்றெட்டு மழிவின்றி
யாயிரத் தெட்டுலகமும்
அரசுபுரி தனியாண்மை கொண்டவெஞ் சூரனே
டவனனுசர் சுற்றமுதலாம்
கண்டகரை யவரெறுழ்ப் புயமெனு மலைகளைக்
கடிதுபொடி யாக்குவடிவேல்
கைத்தலத் தேய்ந்தழகு செய்வததை நீகடைக்
கட்குறிப் பருள்வதுண்டேல்
மிண்டியஃ திம்மென்னு முன்னெனது கன்மமலை
வீறறப் பொடிசெயாதோ
வென்றிதர வென்றுசம ரென்றுமெதிர் பார்க்குமே
வெறுத்திதை மறுத்துவிடுமோ
மண்டலம் புரப்பதற் கீதுமோ ரருமையோ
வாடிநான் ருங்கில்லேன்
மாவையம் பதியமல தேவருந் துதிகுமர
வள்ளலே ஞானவடிவே. (7)

வாசுகியை முதலான வட்டநா கங்களும்
மற்றைய வியாளமெவையும்
மறுகித்தி டுக்குற்று நடுநடுங் கிக்கொடிய
வாய்கணஞ் சுமிழவிரையும்
ஆசுகமு மொப்பில்லை யென்னவரை நொடியிலே
யகிலலோ கமுமுலாவி
அண்டங்க ளாயிரத் தெட்டையுந் தனதுபெடை
யன்றீன்ற முட்டையெனவே
நேசமாய்ச் சிறகணைத் திடுமணித் தோகையந்
நீலக்கி ரீவமயிலை
நீண்முடிச் சேடனே டண்டங்க ளுண்டுமிழு
நின்பராக் கிரமமயிலை
மாசறப் பணிக்கினென் மாயையா மரவுமுடி
வாய்ப்பிடித் துதறிடாதோ
மாவையம் பதியமல தேவருந் துதிகுமர
வள்ளலே ஞானவடிவே. (8)

கரியமுகில் வண்ணனும் சதுர்முகப் பிரமனும்
கற்பகச் சோலையிறையும்
கணிதமறு வானவர் குழாங்களும் மிக்கபல
காலநொந் துற்றபயமாம்
பெரியவிரு ளுங்கொடிய வவுணரிரு ளுங்கரிய
பிரபஞ்ச மூடுமிருளும்
பிறவிக்கு வித்தாகி யடியர்க்கு நோத்தரு
பெருந்திகில் விளைக்குநிலையார்
அரியவிரு ளும்விடிய வான்றலை யுயர்த்தியே
யதிபல பராக்கிரமமாய்
அறைதரக் கூவுமச் சேவனின் கைத்துவச
மதனைநீ பணித்தியென்றால்
வரதவென் னுணவக் கரியவிருள் போய்விடிய
வண்மையொடு கூவிடாதோ
மாவையம் பதியமல தேவருந் துதிகுமர
வள்ளலே ஞானவடிவே. (9)

ஐயகலி யுகத்திலே கண்கண்ட தெய்வநீ
யல்லவோ வடியரெல்லாம்
அருள்கலி யுகக்கடவு ளென்றடி துதித்துநின்
னருளெலா மடைதலுற்றார்
வையமிசை நின்புகழ்க ளுடொறும் பாடியும்
வரமுறப் பெறுகிலேனுன்
வாடுமென் கவலையற நீயருட் டிருவுளம்
வையாத தென்கருத்தோ
செய்யநா னின்னடிமை யல்லனோ வல்லனேற்
றிருவுளம் பற்றன்முறையே
தெரியா தவன்போல மவுனமுற் றுயெனிற்
சீரருட் கீனமன்றோ
மையலற நீயருள்வ தில்லையே னிந்தைநினை
வந்தடையு மென்பதறிவாய்
மாவையம் பதியமல தேவருந் துதிகுமர
வள்ளலே ஞானவடிவே. (10)

உ

# மாவிட்டபுரம் கந்தசாமிபேரில் பதிகம்

துன்னாலை வடக்கு
வே. அப்பாக்குட்டி

## காப்பு

வெண்பா

சீரேறு மாவைநகர் சேர்கந்த சாமியின்மேற்
பாரேறு நற்பதிகம் பாடவே — கூரேறும்
ஒற்றை மருப்புடைய வுன்னதமால் யானைமுகக்
கற்பகமே யெந்நாளும் காப்பு.

---

முதற்பதிப்பு - 1932. அச்சிட்ட நூலை வழங்கியவர் கலைமாமணி, மாவை, கு. பாலசுந்தரக்குருக்கள் அவர்கள்.

இப் பதிகத்திற் பத்தாஞ் செய்யுள் வாழ்த்தாக அமைந்துள்ளது.

## நூல்

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சீரேறு பாலசூ ரியரறுவர் சேர்ந்தெனத்
திகழுமா னனமொராறும்
திவ்யநற் கருணைபொழி யீராறு விழிகளுஞ்
செய்யகுண் டலநிரைகளும்
கூரேறு வடிவேலை முதலான பலபடைகள்
கொண்டுசெந் தாமரையெனக்
குலவுகர முந்நான்கு மலையெனக் குலவிவளர்
கோதிலாப் புயமலைகளும்
நேரேறு கடப்பமலர் மாலையும் முப்புரிகொள்
நிகரிலா வுபவீதமும்
நின்றே யிலங்குதிரு மார்புமம் புயமலரை
நேருந் திருப்பதமுமாய்
வாரேறு முலையுடைய மங்கைதெய் வானைகுற
வள்ளியொடு மென்முன்வருவாய்
வானவர் தினம்பரவு மாவையம் பதியிலுறை
வரதனே கந்தவேளே. (1)

தந்திமுக வைங்கரன் றம்பியா கியகுமர
சண்முகா னந்தரூப
சாகைபல நீடியே வேகமொடு வீரைநடு
தானுமொரு சூதமாகிச்
சிந்தைமயல் கொண்டமரர் முனிவர்முத லாயினோர்
சிற்பரன் றனதுபுதல்வா
சிகியேறு சாமியே துணையேது மிலையெனத்
தேவவுனை நாடியேற்ற
நொந்துபல மாயைபுரி சூரனுடல் கீண்டிடும்
நிலைகொள்வேற் படையுடையவா
நுண்ணறிவு சிறிதுமில ளுகியே மடவார்கள்
நுண்ணிடையில் மையலாகி
வந்துனை யடைந்துளேன் வள்ளிமண வாளனே
வாவென்று கிருபைபுரிவாய்
வானவர் தினம்பரவு மாவையம் பதியிலுறை
வரதனே கந்தவேளே. (2)

கொம்பிருந் தொருகொம்பு தாவுகவி யெனமனங்
கொள்ளாத பேராசையால்
கொடுவிடய மாகுபேய் தன்வசப் பட்டுளங்
குலைவுகொண் டலையுதையா
அம்பனைய விழியுடைய கொடுமாதர் மையலா
லலைவுற்று நாளுமுன்னை
ஐயபன் னிருகைய மெய்யவடி வேலவா
அடியனு மறந்திருந்தேன்
நம்பியுனை வந்தடைந் தேனெனது தந்தையே
நாளுமாண் டருளலரிதோ
நானுனக் கேமைந்த னல்லவோ வென்னைநீ
நாடிவந் தருளொணுதோ
வம்பவிழ் கடப்பமலர் மாலைபுனை மார்பனே
வள்ளிமகிழ் மாலோர்லனே
வானவர் தினம்பரவு மாவையம் பதியிலுறை
வரதனே கந்தவேளே. (3)

மாயமா புரிவாழு வல்லசுர ஞந்தந்தி
மாமுகன் றனக்குறையுளாய்
மாயைகளெ லாம்வல்ல சூழல்கள் பொதிந்துடைய
மால்வரையை ஞானவேலால்
தீயினிடை பட்டதொரு பூழையென வோட்டியே
தேவர்கள் தனைக்காத்தவா
சிங்கார மயிலேறு மங்காத புகழுடைய
தேவதே வேமுருகனே
தாயையே கண்டுவெம் பிடுகுழவி யெனவேழை
தான்தனி புலம்பல்கண்டுஞ்
சாமிநீ மௌனமா யேயிருந் தாலுமடி
தான்விடேன் சத்யமையா
வாயதனை யேதிறந் தஞ்சல்நீ யென்றொருரை
வசனிக்க வொண்ணுததோ
வானவர் தினம்பரவு மாவையம் பதியிலுறை
வரதனே கந்தவேளே. (4)

சந்தத முனக்கடிமை யானநா னிப்பாடு
தான்படுதல் நீதியாமோ
தனையர்கள் படுந்துயரை மாற்றிடுதல் தந்தையின்
றக்ககட னென்றல்லவோ
பந்துமுலை காட்டுமட மாணர்கள் மையலிற்
பட்டுயான் படுதுன்பினைப்
பார்த்துமே துன்னுளஞ் சற்றிரங் கிடவிலைப்
பாவியென் மீதிரங்காய்
சுந்தரப் பணியணிந் தன்னைமடி மீதேறு
சோதிமய மானமுதலே
தோகைமயின் மீதேறி யகிலமுஞ் சூழ்ந்துவரு
சுத்தஞா னத்தினுருவே
வந்துனை யடைந்தவெனை மாயையாம் பிணிவீழ்த்தி
வாழ்விடை யிருத்தியாள்வாய்
வானவர் தினம்பரவு மாவையம் பதியிலுறை
வரதனே கந்தவேளே. (5)

நில்லாத வுடலிதனை நிலையா மெனக்கொண்டு
நிலமாதர் நிதியாசையால்
நிதமான வுள்ளத்து ணீடுதுய ரப்பிணி
நெருங்கிப் பெருக்கமுற்றுக்
கல்லாத மூடக் கடற்படிந் துழல்கின்ற
கன்மஜென் மத்தவர்கள்போல்
கவலைதொட் டலையாம லமணபூ ரணமான
கருணைதந் தாளுமையா
பொல்லாத வினையம் புரிந்தமரர் வாழ்வுசிறை
புரமெரிக் குணவாக்கியே
புன்மைநெறி யேவல்கொண் டின்ஞ திளைத்திட்ட
போர்முகச் சூரனுடலை
வல்லாண்மை யுறவே விடுத்தட்ட வீரமிகு
வனமாலி திருமருகனே
வானவர் தினம்பரவு மாவைய்யம் பதியிலுறை
வரதனே கந்தவேளே. (6)

ஆரணத் தலைநின்ற வற்புதப் பொருளாகி
யண்டபகி ரண்டமெல்லாம்
அன்றுதவி யருள்பிரம னம்புயக் கண்ணனிவ
ரறியாத பரமனருளும்
பூரணத் தியலமல போதஞா னப்பெரும்
புத்தமிர்த சாகரத்திற்
புகழ்பெற வெழுந்தகலை நிறைமதி யெனக்கருணை
பொழியாறு முகவிலாசக்
காரணத் தனிமுதற் கடவுள்நீ யெனமறைகள்
கண்டுகண் டடிவணங்கும்
கந்தசர வணமுருக கருணைக ரானந்த
கலபமணி மயில்வாகனு
வாரணத் துவசகுற வள்ளிமண வாளவெனை
வாழ்விக்க வந்தருளுவாய்
வானவர் தினம்பரவு மாவையம் பதியிலுறை
வரதனே கந்தவேளே. (7)

அத்தியுரி மேல்கொண்ட வப்பனுக் கொருமொழி
யறைந்தபர ஞானகுருவே
அற்புதப் பொலிவான சிற்பர விலாசமே
யரியமா ணிக்கவொளியே
சித்திதரு மெய்ஞ்ஞான தீபமே சித்தந்
தெளிந்தவர்க் கானந்தமே
தேவதே வர்க்குரிய செல்வமே யழியாத
சீரிற் சிறந்தவாழ்வே
முத்திமுத லேகருணை வாரியே நவில்வேத
மூலத் தெழுந்தபொருளே
முன்னினொடு பின்னுமுடி வில்லாத காரண
முதற்கடவுள் நீயன்றியார்
முத்தமதி வைத்தமுத லித்தநெடு மாற்குரிய
மருகனே முருகேசனே
மோனவர் தினம்பரவு மாவையம் பதியிலுறை
முருகனே கந்தவேளே. (8)

சத்தியம் பிகைகௌரி மாதேவி மகமாயி
சர்வசிவ பரிபூரணி
தந்தசிறு மைந்தனு கியகந்த வுன்றனிரு
சரணவரு ணும்புயத்தைப்
பத்திவிசு வாசநெறி முறையாக வனுதினம்
பரவியருண் நிலைமையடையப்
பண்டுமெய்த் தவமிகப் பண்ணுத படிவிட்ட
பாதகச் சென்மியானேன்
முத்திமுத லாய்வேத மூலவோங் காரமாய்
முடிவற்ற ஞானவொளியாய்
முன்னரிய பிரமமய மாய்நின்ற தெய்வமே
முன்னின்று கருணைபுரிவாய்
மத்திரவி யன்னபன் னிருபுயத் தணிகொண்ட
மலர்வாகை யந்தமானே
வானவர் தினம்பரவு மாவையம் பதியிலுறை
வரதனே கந்தவேளே. (9)

முண்டக மலர்ந்தென விளங்காறு முகம்வாழி
முந்நான்கு விழிகள்வாழி
மோதமரி னிடையசுரர் வாழ்வுகெட வமர்செய்த
முந்நான்கு கரமும்வாழி
கண்டவர் நடுங்கவான் புவிமாதி ரம்மேகு
கனகமய மயிலும்வாழி
கரலாயு தக்கொடியும் வேலாயு தப்படையுங்
காட்டுமுன் மேனிவாழி
அண்டையிற் சூழ்ந்துவரு நவவீரர் தான்வாழி
அம்மையர்க ளிருவர்வாழி
அறுமுகா முருகேச குகனே யெனத்தொழுமுன்
னடியார்கள் தானும்வாழி
வண்டாடு செந்தாம ரைப்பூவை யன்னவுன்
மலரடிகள் தினமும்வாழி
வானவர் தினம்பரவு மாவையம் பதிவாழி
வரஉபய கரம்வாழிவாழி. (10)

௳

# மாவைக்கந்தரகவல்

வருத்தலைவிளான்
க. மயில்வாகனப்புலவர்

### காப்பு

வெண்பா

சீர்மலியு மாவைநகர்ச் செல்வ ரகவலுக்குக்
கார்மலியுந் தெய்வக் கயமுகன்றாட் — பேர்மலரே
யுற்றதுணை யாக வுகந்திருத்தி னேனகத்திற்
குற்றமினி யாகா குறி.

---

முதற்பதிப்பு – 1931. முதற்பதிப்பு நூலை வழங்கியோர்: புலவர் மா. சிவபாத சுந்தரன், திருமதி ஞானாம்பிகை தம்பியப்பா.

அகவல்: நால்வகைப் பாக்களில் ஒன்றாய அகவற்பாவால் (ஆசிரியம்) யாக்கப் பட்டமையின் அகவல் எனப்பட்டது.

"இது சீரும் பொருளும் இசையும் நுண்மையவாகப்பெற்ற ஆசிரியர் அறிவித்தல் போலப் பொருள்களை அறிவித்து நிற்றலால் ஆசிரியப்பா எனப்பட்டது."
– யாப்பருங்கலக்காரிகை, அ. குமாரசுவாமிப்புலவர் உரை, பக். 86

## நூல்

அகவல்

திருப்பரங் குன்றத் திருப்பமர் செல்வ
சீரலை வாயிடைச் சேறிய விமல
ஆவினன் குடிக்க ணசைஇய பெரும
ஏரகத் தருளொடு மினிதுறை யமல
குன்றுதொ றாடுங் குணனுடைத் தேவா
பழமுதிர் சோலைப் பருப்பத முதல்வ
சந்ததஞ் சுரர்தொழக் கந்தவெற் பிருந்தோய்
வள்ளியை மணம்கொளீஇ வள்ளிவெற் புறைந்தோய்
பிணிக ளகற்றித் தணிகை யமர்ந்தோய்
குமர கோட்டத் தமருபு வசித்தோய்
நிலைத்தகுங் கதிரை மலைத்தலை வதிந்தோய்
நாமம் பெறீஇக்கதிர் காமம் பயின்றோய்
அண்ணலஞ் சிவனார் கண்ணரு டனையா
மாதரார் கௌரி காதற் புதல்வ
கார்த்திகை தந்த சீர்த்திகொண் மைந்த
கங்கை பயந்த பங்கமில் குழவீ
அமரியெண் டோளி சமரிதன் பால
காடுகா ளென்னு மோடிதன் சிறுவ
அஞ்செனுங் கரத்துக் குஞ்சரற் கிளவ
வாசவ னம்பி கேசவன் மருக
மான்மக டேவர் கோண்மகள் கணவ
வானுறு மமரர் சேனைத் தலைவ
பகல்செயும் செவ்வேற் படையுடை யானே
பசுங்கதிர் மஞ்ஞைப் பரியுடை யானே
கோழி யோங்கிய கொடியுடை யானே
குலவுறு நீப மலருடை யானே
மள்ளருண் மள்ள னாகுபு நிற்போய்
மாற்றார் தமக்குக் கூற்றாய் நிற்போய்
பொருளுளந் தன்னி லொருவனாய் நிற்போய்
புகழ்பெறு மூவர் முதல்வனாய் நிற்போய்

நெடுவரைக் குறிஞ்சி நிலக்கிழ வோனே
புலமையின் முதிர்ந்த புலவர்க ளேறே
சான்ருேர் புகழ்ந்த தகைமொழி மலேயே
உயிர்க்குகை தோறு முறைதரு குகனே
எந்த ஞான்று மிளமைசேர் முருகா
குற்சிதம் போக்கிக் குணனருள் குமரா
சரவணேற் பவனே சாமி குழகா
பொன்னே மணியே பொலிநறும் விரையே
தண்ணூர் கரும்பே தகைமலர்த் தேனே
என்னிரு விழிமணிப் பாவை யாவாய்
மனமெனுங் கண்ணுண் மணியெனு மறிவுட்
பாவை யாகிய பல்லுயிர்க் குயிரே
பரிசில ராய்நின் பதம்பணி பண்பின்
வறியவர்க் கென்றுங் குறைகெடுத் தருள்வோய்
பிணியினர்க் கென்றுந் துனியறுத் தருள்வோய்
கலேவரார்க் கென்றுங் கலேவரப் புரிவோய்
இன்னண மியாவ ரியாதியா தடைவான்
நச்சின ரஃததை நயந்தரு ணெடுவேள்
பெறலரு மோக்கத் திருவரு ளியவுள்
நின்செய லறிந்த நிலேயுடைப் பெரியோர்
கருணேசேர் கந்த சாமிக் கடவுணீ
கண்டவர் யாரும் விண்டுவிண் டோட
முட்டிய தகர்ப்பின் னிட்டனே யென்பர்
சிரமது குனியாப் பிரமனேக் குட்டிப்
புகுத்தியுஞ் சிறைக்க ணகற்றினே யென்பர்
பூமல ரிருந்து தாவறு முலகப்
படைத்தற் ெருழிலு நடத்தினே யென்பர்
ஓமெனுந் தாரக மாமொழிப் பொருளே
ஈசனுக் கருளிய தேசிக னென்பர்
கடலகத் திட்ட வடலகப் புயனே
வீக்கிய மாயை போக்கினே யென்பர்
வஞ்சக வுருவாய் விண்டொட நெடுகி
வளர்ந்ததோர் வரையைப் பிளந்தனே யென்பர்

கொடியவெஞ் சூரைக் குலமுட னறுத்தே
நீக்கரு மகிழ்சுரர்க் காக்கினை யென்பர்
விண்ணவர் கோமா னண்ணலங் களிற்றை
நெருக்கிய சாப முருக்கினை யென்பர்
தாரணி யாண்ட சீர்முசு குந்தற்
கந்தமி னல்வரந் தந்தனை யென்பர்
பாரகம் புகழு நாரத முனிவற்
கடுத்த பெருமை கொடுத்தனை யென்பர்
சீர்சால் பொதியச் சிறுமுனி வரற்குத்
தெளித்தன நூற்பொரு ளளித்தனை யென்பர்
பொய்வழிச் சமய மையிரு ளகற்ற
நீயே சம்பந்த ஞானு யென்பர்
அற்புத மின்னன பற்பல வியற்றிச்
சிறந்தநின் பெருமை யறைந்திட முடிமோ
நல்லிசை மண்டிய நலங்கிளர் சேய்நீ
ஒல்லென் றிரைபிற ழுவர்நீர்க் கடல்சூழ்
கல்லெ னருவிக் கான்யாற் றடைகரை
ஊர்மலி யிலங்கைச் சீர்மகண் முகனுய்ப்
பேர்பெறக் கிடந்து பிறங்கியாழ்ப் பாண
மாநகர்த் துலங்கு மணமிகு திலதம்
நாடொறுங் குன்றிற் குவைஇய பண்டங்
கலத்தாற் றரீஇய கழிக்கரை நெய்தற்
பலத்தாற் றிணியுடற் பரதவர் வணிக
மாக்க ளந்நியர் மற்றவர் போகித்
தேக்கிய வீதிகள் செறிகாங் கேயன்
துறைக்குத் தென்பாற் றுகளறு நிலையம்
நிறைக்குந் தரும நிலைக்கள னாகிக்
கோவி றடமடங் கோபுர மாதி
தேவநற் புண்ணிய தீர்த்தமு மல்கி
நிருத்தன் சினகரந் திருத்தக மேவி
நுரைத்தலைப் புனலால் வரன்றிடு மணிகொள்
சாரற் [illegible]றிஞ்சிக் கிரி மலைக்கு
நேரிற் [illegible]றன்கீழ் நிலவுறு பாக்கங்

காடுசார் முல்லை கழிந்ததற் கப்பால்
நாடுசார் மருத நன்னிலத் திடையே
இஞ்சி கருணை யியல்வகை மூலம்
மஞ்சடாம் பூல வல்லிமற் றவைகள்
பைங்கிளி மஞ்ஞை பகர்குயி லாதி
தங்கிய வைப்பிற் றண்டலை தோறும்
வாழை வருக்கை மாவொடு தெங்கு
பூக நரந்தம் புகழெலு மிச்சை
மாதுளை கன்ன லாசினி மருவித்
தேம்படு பனைநல் வேம்பொடு நாவல்
தண்புளி யாலர சாத்தி யிருப்பை
ஆதிய விரசி யழகுறு மாவையில்
வீதிகள் மடங்கள் விரையுறு பூங்கா
கொடிதவழ் கோபுரங் கூவல்கள் பல்குங்
கடிமதிற் கோவிற் கடவையின் கண்ணே
முழுமதி யன்ன மூவிரு முகனுஞ்
செழுமல ரன்ன பன்னிரு விழியுஞ்
செங்கையி ராறும் பொங்குறு படையுங்
கொங்கல ரணிக டங்கிய புயனுங்
கொழுமலர்க் கஞ்சக் கழலடி யிணையுங்
கெழுமிய வடிவோ டரிவையர் சகிதம்
எழின்மயின் மிசையே யெழுந்திருந் தருளல்
நம்மனோர்க் கருடருஞ் செம்மையி னன்றோ
தாயுந் தந்தையு மாகிய நீயிஞ்
ஞாலத் திருள்கெட மோலி கவித்துங்
கருநீ றடையத் திருநீ றணிந்தும்
மண்டலம் மகிழக் குண்டலம் புனைந்துங்
காப்புப் புரிதரக் காப்புச் செறித்துந்
துயராழ் போக்க விரலாழி யிட்டுஞ்
சுழல வினைகள் கழல்க ளணிந்தும்
நலம்படக் காலிற் சிலம்புக ளியைத்தும்
இங்ஙனம் விளங்கினை யாவொடு மன்றே
பூமக ளுறையு மாவையம் பதியிற்

றகுமுறை விரத நகுலநன் முனிக்குக்
கருதிய வரநீ யருளினே யெனவும்
குதிரை முகத்தி னரசிளங் குமரி
மாற்றரு நோய்குறை பாற்றினே யெனவும்
கன்ன பரம்பரைக் கதைகளு முளவே
மாவையில் வந்துன் மலரடி போற்றீ
வேண்டுந வேண்டியாங் கெய்தினர் பலர்தாம்
ஆண்டாண் டுறைதலு மறிவா மன்றே
நின்றன தத்தன் குன்ற வில்லி
தன்செய லாயத் தகுமினி யையா
மந்தர மலையை மத்தெனக் கொண்டே
பாற்கடல் கடைநாள் எழுந்திடு நஞ்சை
உண்டுயிர் யாவையுங் காத்தன னென்றுந்
தக்கன் முனிவாற் றனித்துயர் கொண்ட
சோமனைச் சடையிற் சூடின னென்றும்
அஞ்சுற யாரும் வந்ததொர் நதியைத்
தரித்ததன் வலிமை கெடுத்தன னென்றும்
வந்திதன் பிட்டைக் கந்தையி லேற்றே
உண்டனன் மண்ணைச் சுமந்தா னென்றும்
வானவ ருய்யத் தானவர் புரங்கள்
சிரித்துப் பொடியா யெரித்தன னென்றும்
யோகமும் விழைந்த போகமுந் தழைக்க
யோகியும் போகியு மானா னென்றும்
வாசவன் சேய்செய் மாசறு தவத்தாற்
பாசு பதந்தரப் பரிந்தன னென்றுந்
தந்தைதா ளறுத்த மைந்தனுக் கன்று
முந்துறு முயர்நிலை தந்தா னென்றும்
நாலுறழ் நாலாண் டுடைமறை யோற்காக்
காலனைக் காலா லுதைத்தன னென்றுங்
குருவடி வாகித் திருவுப தேசம்
வாத வூரனுக் கோதின னென்றும்
ஞானசம் பந்தற் கானவெண் முத்துச்
சிவிகை யாதி யுதவின னென்றும்

வாகீ சனுக்குப் போகாத குன்மங்
கொடுத்துச் சிவனெறிப் படுத்தின னென்றும்
சுந்தரன் பொருட்டுத் தூதுநல் விரவிற்
சென்றே பரவைக் குரைத்தன னென்றும்
இவைபோ லின்னு நவைதீ ராடல்
நனந்தலை யுலகத் தனந்தபல் கோடி
ஆங்காங் கருளின் விளைத்தன னென்றும்
அலகிலா நூல்கண் மலைவிலா தியம்புஞ்
சாம்பவி நின்ருய் தனிச்செய ஞேக்கிற்
றக்க னுஞற்று தனித்தவக் கிரங்கி
மகளெனச் சின்னுள் வைகின ளவளே
வரைகளுக் கரையன் புரிதவப் பயனுய்
உலகினி னிலவு மலைமக ளவளே
நந்நான் கிரட்டி நல்லறம் யாவும்
ஒப்பறச் செய்திடு முத்தமி யவளே
எவ்வகை யருளு மெளிதினி லினிதாய்
அழகொடும் பிறப்ப தவள்வயி னன்றே
வினைக ளகற்றும் விநாயக ஞகிநி
னண்ணன் பெருமையை யெண்ணுவ மிப்பால்
நம்பிக் கருங்கலை ஞான மளித்துப்
புரந்தரற் காகப் பொன்னியைப் பாய்ச்சிக்
கலங்கஞர் விளைத்த கயமுகற் றடீஇக்
குறுமுனி தனக்குப் பெறுவர மருளி
இராவணன் றனக்குப் பராவரு ளுதவி
அவ்வையை வெள்ளி யகன்கிரி மிசையே
முன்னர்ப் புகுதர முறைமையிற் கூட்டி
இவ்வா றளவில் கைம்மா றற்ற
திருநலன் கொழிக்குங் கருணையங் கடலென்
றறைந்த தறிந்தவா றறைந்து மன்றே
ஆதலி னின்னை யன்பிற் கைதொழுஉப்
பரவிப் பதம்பணித் துற்றனென் பரம
அருட்குண னுன்ற னியற்குண னன்றித்
தந்தைக் குளகுண மைந்தற் கும்மே

அனையர்க் குளகுணந் தனயற் கும்மே
அண்ணற் குளகுணம் தம்பிக் கும்மே
ஆயினுந் தோன்று வளியனே னீண்டு
வலையினிற் பட்ட வுயிரினைப் போலும்
அராமுற் பட்ட வெலியினைப் போலும்
கருடனைக் கண்ட வரவினைப் போலீம்
தனித்துயர்க் கடலி னனிவீழ்ந் துழலத்
தெரிந்துங் கடாக்ஷஞ் செய்யாத தென்கொல்
மைந்தர்செய் குற்றந் தந்தையர் பொறுத்தல்
முறைமையென் றறிஞ ரறைகுவ ரதனல்
சிறியேன் செய்த சிறுபிழை யெல்லாம்
பொறுத்து நன்னிலை நிறுத்துக வையா
அத்தனெ டம்மை யருட்குரு தெய்வம்
முத்தியென் றெல்லா முழுப்பொரு ணீயே
நினையலாற் றெய்வம் நினைக்கவு மறியேன்
பினையொரு தெய்வம் பேசுதற் கிலையேன்
தொழுதகு தெய்வ நீயெனத் துணிந்தேன்
எவ்வகைத் துயரு மின்னே தபுக்குதி
வேதமு மறியாச் சோதிவா னவனே
நாதமுங் கடந்த போதவான் கடலே
சின்மயா னந்த நின்மல முதலே
ஆதியு மந்தமு மிலாப்பழம் பொருளே
எங்கு நிறைந்து தங்கிய வியாபி
சச்சிதா னந்த சகளநிஷ் களனே
அருளுக வருளுக வரமெலா மருளுக
அருளுக பதத்துணை யருளுக வருளே.

வெண்பா

நதல முனிவரற்கு நல்லரு டேக்குந்
தகுகருணை வாரிதிதா னென்னை — வெகுதுயரி
னின்று மெடுத்தே நிலையருளு மென்றங்குச்
செ[illegible]று துதித்தேன் றிறன்.

முல்லைக் கிணைநகையாண் முன்னே பரிமுகத்து
வல்லிக் கருள்பொழியும் வான்மேகம்—செல்லற்கண்
யானுழலக் கண்ணோக்க மெட்டுணையும் வையாதோ
தானெனமுற் புக்கேன் றனி.

**கலித்துறை**

அஞ்சங் கலந்த மலர்வாவி தோன்று மறுமுகவா
வஞ்சங் கலந்த கலிநீடி நின்று வருத்தியெனை
நெஞ்சங் கலந்த பிணிதந்து வாட்டு நிலைகுலைத்துத்
தஞ்சங் கலந்த வழியென்று காட்டு தயைபுரிந்தே.



உ

# போற்றித் திருவகவல்

பூநகரி
முருகேசர் கனகசபை

## நூல்

அகவல்

பொன்னவிர் கடுக்கை மின்னவிர் சடையோன்
கந்தரு ளுண்மைக் கந்தா போற்றி
ஐயையின் பாலகா மெய்யா போற்றி
தாரக வுருவாம் வீர போற்றி
குகனே யாறு முகனே போற்றி
முருகா மாயன் மருகா போற்றி
தும்பிக் கிளைய நம்பி போற்றி
வாஞ டளித்த கோனே போற்றி
விண்ணவர்க் காத்த பண்ணவ போற்றி
பூமி படைத்த சாமீ போற்றி

---

இதுவரை அச்சில் வெளிவரவில்லை என அறியப்படுகிறது.

நாட்டுப்பாடற் கலைமணி, மக்கள் கவிமணி, வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் அவர்களின் முயற்சியாற் பெறப்பட்ட ஏட்டுச்சுவடியிலுள்ளது. அறிஞர் குல. சபாநாதன் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக நூல்நிலையத்திற்கு அன்பளிப்புச்செய்த விலைமதிப்பற்ற செல்வங்களில் இதுவும் ஒன்று. ஏட்டுப் பிரதியைப் படியெடுக்க இசைவுதந்து உதவிபுரிந்த யாழ். வளாகத்தினர்க்கும், சிறப்பாக, அதன் உதவி நூலகர், கலைமாணி, ஆ. சிவநேசச்செல்வன் அவர்களுக்கும் சைவத் தமிழுலகு கடப்பாடுடையது.

ஏட்டைப் படித்துக் கையெழுத்துச் சுவடியொன்றுடன் ஒப்பிட்டுத் திருத்தமாகப் படியெடுத்து[illegible]ியவர் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை அவர்கள்.

ஏட்டில் சி[illegible]தவுற்ற இடங்களிற் பொருத்தக்கூடிய பகுதிகள் அடிக்குறிப்பாகத் தரப்பட்டு[illegible]ன.

ஏழைக் கிரங்கும் வேளே போற்றி
மழவிடை யனைய குழகா போற்றி
நாயேற் கருள்செய் சேயே போற்றி
கார்த்திகை சுதனும் மூர்த்தி போற்றி
வரைபக வெறிந்த சரவண போற்றி
சானவி தூந்த மானவ போற்றி
வாரண முயர்த்த சாரண போற்றி
அணியார் சுப்பிர மணியா போற்றி
வேதா சுவாமி நாதா போற்றி
சத்திகண் டுவமர் சத்தா போற்றி
அமரா டியதிண் குமரா போற்றி
தலைவா சங்கப் புலவா போற்றி
கீரனைக் காத்த தீரனே போற்றி
[1]பா வேலா போற்றி
[2]குன் று நின்றாய் போற்றி
செந்திப் பதியி னெந்தாய் போற்றி
மாவைப் பதியார் கோவே போற்றி
நல்லை யுவந்த வெல்லே போற்றி
கதிரையில் வாழுஞ் சதுரா போற்றி
உள்ளத் துறையும் வள்ளால் போற்றி
ஒப்பொன் றில்லா வைப்பே போற்றி
அரனே போற்றி வரனே போற்றி
வேலா தண்டைக் காலா போற்றி
ஆரணற் கருள்செய் பூரண போற்றி
ஐயா பன்னிரு கையா போற்றி
என்னுளத் திருக்கும் பொன்னே போற்றி
கல்லாச் சிறியேன் எல்லா முணரப்
போதந் தந்த வேதா போற்றி
ஈழை யென்னும் பீழையி னயர்ந்து
நாசம் புரியும் காசப் பிணியால்
தீயெரி யென்ன வாய்நுரை கக்க
இருமி யுதரம் பொருமிப் புலம்பித்
துன்பி னினைந்து ளென்புரு வாகிப்
போனகங் குறைய ஊனது வற்றி
உடலுலை வாக நடையது குன்றி

1. லனு கின்ற. 2. றுக டேர.

வீழுதன் முன்ன ராளுதல் கருதி
வந்தெனை வருத்தும் பந்தம் தவிர்த்தல்
பரமுனக் கென்ற விரவல னென்னை
நீகை விடுகில் வாவென் றழைக்க
மற்று ருண்டு சுற்றமு நீயே
அன்னையு மத்தனும் பின்னுள வுறவோ
இருவகை நிதியோ திரவியக் குவாலும்
துய்க்கப் படுமெலா முக்கியப் பொருளும்
உன்னை யன்றிப் பின்னையொான் றில்லை
என்பது தெரிந்த வன்பனுக் கின்னே
வருக வருக மயூர வாகன
[1]பொன்      ரு நின்மய மாக்கி
[2]ஊழ்      பாழ்வினை தொலைந்து
[3]வா      க்கற விறந்த
நிலையுங் காட்டிப் புலனைந் தொடுங்கத்
தத்துவங் காட்டித் தற்பத முதலாம்
அற்புத முணரக் கற்பனை செய்து
நிற்பினும் இருப்பினும் மற்றவை செயினும்
மோனத் திதயந் தாஞெத் திருக்கவும்
இவ்வுட லொழிந்த வெவ்வுடல் வரினும்
அவ்வுட ஞேறுஞ் செவ்வடி நினைக்கும்
புந்தியு மெனக்கு முந்துவந் துதிக்கவே
ஆவி வைகுஞ் சீவிய காலஞ்
சுகமா விருந்துள் ளகமுக மாகி
ஏத்தவு முன்புகழ் தோத்திரஞ் செயலு
மென்போ லன்பா வின்புள சிறார்கள்
பாடிப் பணிந்துள் ளாடிப் பரவ
வரமிவை யாவுங் குறைவறத் தருவாய்
போற்றி போற்றி சயசய போற்றி
போற்றி போற்றி பூங்கழற் பொன்னடி
போற்றி போற்றி புண்டர வதனம்
போற்றி போற்றி பொருப்பெறிந் திடுவேல்
போற்றி போற்றி பூண்முலை மாதர்
போற்றி போற்றி மயூரப் பொருப்பு
போற்றி போற்றிஎந் நாளும் போற்றி.

---

1. னவா[illegible]மன்னு. 2. வினை எனுமோர்.
3. க்குட[illegible]ணர்வும் போ.

# மாவை இரட்டை மணிமாலை

சுன்னாகம்
அ. குமாரசுவாமிப்புலவர்

## காப்பு

### கட்டளைக்கலித்துறை

பொன்னுரு மாவைத் திருக்கோயில் மேவிப் புகுந்திருக்கும்
மன்னுன கந்த சுவாமி சலச மலரடியைச்
சொன்னு டிரட்டை மணிமாலை கொண்டு துதிப்பதற்கு
முன்னுன யானை முகவன் றிருவடி முன்னுதுமே.

## நூல்

### வெண்பா

திருவேறு மாவைநகர்த் தேவே பரம
குருவே யுமையாள் குமாரா — மருவாருஞ்
சந்த மலர்க்கடப்பந் தாராய் தமியேன்றன்
வந்தனையுங் கொண்டருள்வாய் மற்று. (1)

### கலித்துறை

மற்புய தாரக மாரக துங்க வரதவருட்
சிற்பர வற்புத சின்மய தேவ சிகாமணியே
யற்பக னின்றனை யன்றியொன் றுன்ன லறத்தவிர்ப்போ
யுற்பல வாவித் திருமாவை வாழ்வுசெ யுத்தமனே. (2)

---

மாவைப்பதிகமும் (பக்கம் 1) இதுவும் ஒன்ருகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இரட்டைமணிமாலை: 'பவளமும் முத்தும் ஆகிய இருவேறு மணிகள் மிடைந்த மாலைபோல வெண்பாவும் கட்டளைக்கலித்துறையும் அந்தாதியாக அமையவும் ஈறும் முதலும் மண்டலிக்கவும் இருபது செய்யுட்களாற் பாடப் பெறும் பிரபந்தம்.' — ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டு (திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு – 1961. பக். 125)

இந்நூல் 'திருவே' (1) எனத் தொடங்கித் 'திருவே' (20) என முடிவது காண்க.

வெண்பா

உத்தமராய் நின்புகழை யோதித் துதிசெய்வார்
சித்தியெது வேண்டிடினுஞ் சேர்குவரே — முத்துக்
குமரா திருமாவைக் கோனே யவுணர்
சமராடுஞ் சத்தி த்ரா. (3)

கலித்துறை

தராதலம் போற்றிய மாவைப் பதியுறை தற்பரனைக்
குராமலர் சூடிய சுப்பிர மண்ய குருபரனைப்
பராவில ராகி முடையுடல் வீக்கும் பதகரந்தோ
கராசலம் போலந் தகன்வர நொந்து கலங்குவரே. (4)

வெண்பா

கலங்குவரோ நின்கோயில் கண்டுதொழு தன்பால்
வலங்கொண்டு வாழ்த்தி வருவார் — இலங்கியபூங்
கொத்துவிரி சோலைக் குளிர்மாவை வாழ்வுகந்த
சத்திதர காங்கேய தாம். (5)

கலித்துறை

தாமே தமக்குப் பகைவரன் றேபகை தாமென்றுமாய்த்
தோமே செறியும் பொருளினை வாழ்வைத் துராலுடம்பை
யாமே நிலையென நின்னுற வற்ற வறிவிலிகள்
தூமேவு மாவைப் பதியா யமரர் தொழுவள்ளலே. (6)

வெண்பா

வள்ளலெனு முத்துக்கு மாரப் பரம்பொருளை
உள்ளுமின் கைகூப்பி யோதுமின் — தெள்ளுங்
குருமா மணிசேருங் குண்டுநீர் வாவித்
திருமாவை யூரிடத்துச் சென்று. (7)

கலித்துறை

சென்றே யமரர் தொழுமாவை வாசனைச் செய்யகுணக்
குன்றே [illegible]னவரு முத்துக் குமார குருமணியை
நன்றே [illegible]றப்பணிந் தன்புட னேவ னயந்துசெய்வோர்
வென்[illegible] பிறவிப் பெருங்கடல் நீந்துவர் மேலினியே. (8)

வெண்பா

மேலான நின்கழலே வேண்டிமன நெக்குருகேன்
பாலான தொண்டு பணிந்தியற்றேன் — ஆலால
மண்மு களத்தோ னருள்புதல்வ மாவையுறை
சண்முகனே யுய்யநெறி தா. (9)

கலித்துறை

தாயே பரம னுதற்கண் டரவருஞ் சண்முகத்துச்
சேயே வளங்கொளு மாவைப் பதிவதி தெய்வதமே
நீயே யுயிர்க்குத் துணையெனத் தேர்ந்து நினைநினையேன்
நாயேன் பிழைபொறுத் தென்றும் பெருஞ்சுக நல்குதியே. (10)

வெண்பா

நல்குரவு நீங்கும் நலிபிணியுந் தானீங்கும்
வெல்பகையு நீங்கி விளிந்தோடும் — சொல்வளங்கொள்
தண்டலைசேர் மாவைத் தலத்தமருஞ் சண்முகனைக்
கண்டுதுதி செய்தக் கடை. (11)

கலித்துறை

கடையேன் பிறவிப் பெருந்துயர் நீங்கிக் கதியடையத்
தடையேது மின்றி வரந்தரல் வேண்டுஞ் சராசரங்கள்
அடைவே புரக்கு மருட்கட லேயட லாரயிலோய்
விடையேறி மைந்த திருமாவை மேவிடும் வித்தகனே. (12)

வெண்பா

வித்தகராய் வாழ்ந்தாலென் மேதினியை யோர்குடைக்கீழ்
வைத்தவராய் வாழ்ந்தாலென் மாதேவா — சத்தியுறுஞ்
செங்கையாய் மாவைத் திருநகரா யென்னுதார்
தங்கள்வினை நீங்கிடுமோ தான். (13)

கலித்துறை

தானே தனக்கு நிகராக வைகிய சண்முகனைக்
காணார் பொழிலெழின் மாவையந் தேவைக் கருத்துள்வைப்பின்
ஊனு ருடம்பு நிலையன்று செல்வ முறுதியன்று
மாணர் கலவிச் சுகமு நிலையன்று மானுடரே. (14)

வெண்பா

மானுடஞ்சேர் நற்பிறவி மற்றுண்டு வாயுண்டு
ஆநறுநீர் பூவுண்டு தோத்திரமுண் — டானவொரு
வித்தகஞ்சேர் மாவைநகர் வேளுண்டு கூற்றுவனால்
எய்த்திடுவீர் நும்மதறி வென். (15)

கலித்துறை

என்னே வளஞ்செறி மாவையிற் றேவனை யான்வணங்க
முன்னே புரிந்த பெருந்தவம் வேத முதல்வனவன்
மின்னே ரிடைவள்ளி காந்த னவன்கிரி வேந்தனவன்
அன்னே யெனத்துதித் தன்புசெய் வாருக் கருள்செயுமே. (16)

வெண்பா

அருளே புரியா தகற்றுவையேல் வேதப்
பொருளே யெனைவிட்டுப் போமோ — மருள்பிணிநோய்
சீராரு மாவைத் திருத்தலம்வாழ் முத்துக்கு
மாரா திருவாய் மலர். (17)

கலித்துறை

மலர்மாலை சூட்டிலன் மெய்த்தவ மீட்டிலன் மாயவினைக்
குலமாலை வீட்டிலன் கோதுகள் வாட்டிலன் கூரறிவு
வலமாக நாட்டிலன் நீயேனு முய்யும் வகைகளுண்டோ
நிலமே லுயர்தரு மாவைப் பதிவதி நின்மலனே. (18)

வெண்பா

நின்மலனைச் சண்முகனை நித்தியமுத் துக்குமர
சின்மயனை நெஞ்சே தினந்தினமும் — பன்மலர்க
டூவித் திருமாவைத் தொல்பதிசென் றேத்துதிநீ
பாவங்க ணீங்கும் படி. (19)

கலித்துறை

படியேழ் தொழுமெழின் மாவைப் பதிவதி பண்ணவனை
முடியாத பேரருண் முத்துக் குமார முழுமுதலைக்
கொடியோ னமன்வரு முன்னே ப்ணிந்து குழைந்துருகி
யடிமே[illegible] கிடத்தி மனமே தருமுத்தி யாந்திருவே. (20)

# பகுதி - II

மாவை முருகன்மீது பாடப்பெற்ற பிற நூல்கள் சிலவற்றை அறிமுகஞ் செய்யும் வகையில் ஒவ்வொன்றிலும் சிற்சில பாடல்கள் இப் பகுதியிலே தொடுக்கப்பட்டுள்ளன.

உ

# மாவை மும்மணிமாலை

கரணவாய்
பண்டித, செவ்வந்திநாததேசிகர்

வெண்பா

மட்டியலுங் கோகனத மாமலரோன் சென்னிமிசைக்
குட்டியநன் மாவையுறுங் கொற்றவனைக் — கட்டியவெம்
பாசவினை நீத்தவன்பொற் பாதமலர் சென்றுறுவா
னேசமுட னெஞ்சே நினை.

கட்டளைக்கலித்துறை

நினைவார் மனத்து நினைந்தவெல் லாமரு ணின்மலன்பைஞ்
சுனைவா யெழுந்திரை மீன்றிரள் வீசிடத் துன்றியமாஞ்
சினைவான் கனியுதிர் மாவைப் பிரானறுஞ் செங்கடம்பு
புனைவான் புகழைப் புகல்வார்க்கு முண்டுகொல் புன்பிறப்பே.

---

**முதற்பதிப்பு** - 1932. (கரணவாய் வித்தியாபிவிருத்திச் சங்க வெளியீடு) அச்சுப் பிரதி மாவை கு. பாலசுந்தரக்குருக்கள் அவர்களிடமுண்டு. இந்நூலுக்கு சி. கணேசையர், ஞா. சிவப்பிரகாசதேசிகர், வே. கணபதிப்பிள்ளை, க. மயில்வாகனம் ஆகிய பண்டிதர்கள் சிறபுப்பாயிரம் வழங்கியுள்ளனர்.

**மும்மணிமாலை :** "மேன்மையுற்ற வெண்பாவும், கலித்துறையும், ஆசிரிய விருத்தமும் சொல்லப்படும் அந்தாதியாய் **முப்பது** செய்யுள் வருவது மும்மணிமாலையாம். வச்சணந்தி மாலையிலும், இலக்கண விளக்கப் பாட்டியலிலும் மும்மணிமாலை, வெண்பாவும் கலித்துறையும் ஆசிரியப்பாவும் அந்தாதியாக **முப்பது** செய்யுள் வருவது எனக் கூறப்பட்டது." — **பன்னிருபாட்டியல்**, இனவியல் - 152. (திரு. கா. ர. கோவிந்தராசமுதலியார் உரை - பக். அஎ)

இந்நூல் பிற்கூறப்பட்ட மூவகைப் பாக்களையும் வகைக்குப் பத்தாகக்கொண்டது.

இந்நூலில் காப்பும் 2, 3, 9, 10. 14, 22, 24, 26ஆம் பாடல்களும் **ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்திலும்,** (சாகித்தியமண்டல வெளியீடு-1966 பக். 373 - 375) 4ஆம் பாடல் **ஈழநாட்டுப் புலவர் சரிதத்திலும்** (வித்துவான் சி. கணேசையர் - 1939 பக். 198) வெளிவந்துள்ளன.

### அகவல்

புழைகொள் பூதரம் பொன்றிட வெறிந்த
வேற்படைக் கரத்து விறற்பெரு முருகனைப்
போற்றுவ லன்றே போற்றுவ லன்றே
தேங்காய்ப் பெருந்திர ளோங்குசினைப் பலவிற்
றூங்கிய *முட்புறச் சுவைகெழு வான்கனி
விள்ளுற வீழ்தலின் வெறிகமழ் செழுந்தேன்
கொள்ளையாச் சொரிந்து தெள்ளிதிற் படர்ந்து
தண்கெழு பூம்புனற் றடம்பணைச் செந்நெல்
செழிப்புற வளர்க்குந் தெய்வநன் மாவைப்
புரத்துறை யிறைவனைப் போற்றுவ லன்றே
யென்னெனின்,
மண்டிணி ஞாலத்துப் பண்டைநா ளுஞற்றிய
விருவினைத் திரளின் பெரும்பய னாக
வந்துறப் பெற்றவிவ் வழும்புநிறை யாக்கை
படுமமை யத்தும் படரியா னுற்றிடா
தருள்கொழித் தென்னை யளிசெயற் பொருட்டே.

### வெண்பா

பொருள்கொண்ட மாவைப் புரத்தினிது மேவு
மருள்கொண்ட செஞ்சுடர்வே லையா — தெருள்கொண்டே
யென்கடனின் றொண்டுசெய லென்றுமெனக் கேயருள
னின்கடனு மிந்த நிலத்து.

### கட்டளைக்கலித்துறை

நிலமேவு மாந்தர்சென் றேத்துநன் மாவை நெடுநகராந்
தலமேவு வேற்குகன் றுனவர்ச் செற்ற தலைவனளிர்
சலமேவு பூங்கழ லேயமொ டேத்துந் தகைமையினோர்
புலமேவு மைய லெரிதாவு பஞ்செனப் பொன்றிடுமே.

# மாவையந்தாதி

திருவாவடுதுறை ஆதீன வித்வான்
சபாபதிநாவலர்

## காப்பு

கட்டளைக்கலித்துறை

பூவைத் திருத்தி யுடனே புனைந்து பணிந்துபுகழ்
நாவைத் திருத்துவ னெஞ்சத்து நாகத் திருமுகனை
மாவைத் திருத்தல வேளுக்கந் தாதி வகுத்திடவின்
பாவைத் திருத்த முறவெனக் கீந்தருள் பாலிக்கவே.

## நூல்

பொன்னங் கடுக்கைப் புரிசடை யோன்றன் புதல்வன்முனோர்
முன்னங் கடுக்க முயலான் முளரி மலர்களினந்
தன்னங் கடுக்கும் வயலீழ மாவைப் பதியகத்து
மன்னங் கடுக்க மொழித்தருள் பாலிக்க வைகினனே.

வைத்தானை யால சுரக்குழு மாய்த்தவன் மாவைமனல்
கைத்தானை யாலொரு கானக் குறத்தி களபமுலை
துய்த்தானை யாறமர் பெம்மான் மகன்றன் றொழும்பிலெனை
யுய்த்தானை யாதுபெரய்த் தேவர் தொழும்பினை யுற்றுநின்றே.

உற்றவ னன்பர்க் குருதவ னன்பி லுளத்தினர்கண்
முற்றவ னன்குணர்ந் துய்யமெய்ஞ் ஞான மொழிந்தவன்மால்
கற்றவ னன்றொழ மேயதென் மாவைக் கடவுட்டொழப்
பெற்றவ னன்றுவ ரும்வினை வேரறப் பெற்றவனே.

---

முதற்பதிப்பு - 1885. (சென்னை வைதிக சுத்தாத்வித சித்தாந்த சபை) அ. சோமசுந்தரமுதலியாரின் சிறப்புப்பாயிரம் உளது. யாழ். வளாக நூலகத்தில் முதற் பதிப்புப் பிரதியுண்டு.

அந்தாதித்தொகை: "(புலவர்களால் தாங்கள்) விரும்பிய பொருள்களின் மேல் வெண்பாவாயினும் கலித்துறையாயினும் (அந்தாதித் தொடையின்) அமையப்பாடப்படுவது. அந்தாதி என்பது அந்தத்தால் அமைந்த ஆதியை உடையது என்னும் பொருளது. அதாவது தன்கண் உள்ள செய்யுட்களுள் முன் உள்ள செய்யுளின் அந்தத்தால் அமைந்த ஆதியை அடுத்துள்ள செய்யுள் பெற்று வருதலை உடையது என்பது. அந்தாதி என்னமல் அந்தாதித் தொகை என்றது அது, பெரும்பான்மையும் நூறு செய்யுளாற் பாடப்பெறும் என்பதூஉம் சிறுபான்மை முப்பது முதலிய செய்யுட்களாலும் பாடப்பெறும் என்பதூஉம் அறிவித்தற்காம்" — பன்னிருபாட்டியல், இனவியல் 212, பக் 139, 140.

மாவையந்தாதிகள் இரண்டும் நூறு நூறு பாக்களால் ஆனவை.

# மாவை
# யமக அந்தாதி

தெல்லியம்பதி
பூ. பொன்னம்பலபிள்ளை

•

### காப்பு

கட்டளைக்கலித்துறை

உலகு பரவு புகழிலங் காபுரத் துச்சியதா
யிலகுபொன் மாவைக் குகன்மேலந் தாதி யிசைக்கமதி
நிலவிய வேணிய ருண்மத யானையை நெஞ்சில்வைத்து
மலர்விருப் பாற்புனைந் தென்னுவி லென்றும் வழுத்துவனே.

### நூல்

திருமா திருமா லருடொழின் ஞானந் திகழுருவத்
திருமா திருமா சுதரே கலைகுரு சேதனக்க
திருமா திருமா ணடியே யடைந்த சிறியனுளந்
திருமா திருமாவை யந்தாதி முற்றச் சிகாவளரே.

காவணங் காவணங் கார்கொடி மேழியர் கற்பகப்பூங்
காவணங் காவணங் காற்றன் மறையே கமலைநெருக்
காவணங் காவணங் காட்டிய மாவைக் கவிகுறையா
காவணங் காவணங் காந்த மறைத்துங்க தாரகமே.

தாரகந் தாரகந் தோய்நீரிற் றுனவர்ச் சாய்த்திடுவி
தாரகந் தார்கந் தப்பொழின் மாவைத் தலையவனே
தாரகந் தாரகந் தைக்கடந் தீச்சினஞ் சாய்த்துனடைந்
தாரகந் தாரகந் தாழ்குக தாகழற் றுமரையே.

---

**பதிப்புக்கள்:** I - *1889.* II - *1940.* 2ஆம் பதிப்புப் பிரதி நூலாசிரியர் மருகர், கொல்லங்கலட்டி அ. சின்னத்தம்பி அவர்களிடம் உண்டு. இந்நூலுக்கு ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் எழுதிய உரை விரைவில் வெளிவரும். இந்நூலின் பின்னிணைப்பாகச் சித்திரக்கவிகள் ஐந்து உள்ளன. யாழ். சின்னத்தம்பிப்பிள்ளை அவர்களின் சிறப்புப் பாயிரம் உளது.

**யமகம்: (மடக்கு).** சொல்லணி வகைகளில் ஒன்று. அதாவது வந்த சொல்லே மீண்டும் வருதல். இந்நூலிலுள்ள பாடல்கள் முற்று மடக்காக உள்ளன. முதலாமடியில் வரும் **திருமா திருமா** என்ற தொடர் ஏனைய மூன்று அடிகளின் ஆரம்பத்திலும் வருதல் காண்க.

உ

# மாவைப் புராணம்

மாவைக் குருமணி
சா. குமாரசுவாமிக்குருக்கள்

## மாருதப்பிரவல்லி உற்பத்திப் படலம்

விருத்தம்

மன்ன னுக்கிரன் மனைவி பால்வயிற்
பன்ன கத்தலைப் பாவை யேங்கவுந்
துன்னு மாமுகந் துரக மாமுகம்
என்ன மாருத வல்லி யெய்தினாள்.

துரக மாமுகி தோன்றும் காலையே
நரக மெய்தல்போ னடுக்க மெய்மன்
கரக மேந்துவான் கச்சங் காண்கிலான்
புரக தன்பதம் போற்றி வைகினான்.

அன்னை துன்புற வயலர் துன்புறப்
பின்னை துன்புறப் பிதிர்க டுன்புற
மன்னர் துன்புற மதியர் துன்புற
உன்னி மாமுகி யுடலெ ழும்பினாள்.

அன்ன காலையாண் டாறி ரண்டுற
இன்னல் வேலையா ளிரங்கி யுற்றனள்
கன்னல் வில்லினான் கவலை கொண்டனன்
றன்னல் வில்லினிற் றலைமை கெட்டென.

அழுங்கி விள்ளுவா ளழுது சோருவாள்
விழுங்கி விம்முவாள் விழுந்து தாழுவாள்
மழுங்கி மாழுவாள் மயங்கி யேங்குவாள்
எழுந்து வீழுவா ளென்று மேழையாள்.

---

ஆக்கம் - 1913. இந்நூல் 23 படலங்களையும் 1583 விருத்தப் பாடல்களையும் கொண்டது. இது இதுவரை அச்சிடப்படவில்லை. நூலாசிரியரின் புதல்வர் கலைமாணி கு. பாலசுந்தரக் குருக்கள் அவர்களிடம் கையெழுத்துப்படி உண்டு.

மாவைப்புராணம் வெளிவர மாவை முருகன் அன்பர்கள் ஆவன செய்ய வேண்டும்.

சிரக ரங்களைச் சென்னி சூட்டுவாள்
உரப ரத்தினி லொற்றுந் தன்மையாள்
விரத வேடமே விழுமி தென்றெணிப்
பரதர் தன்மையிற் பாடு பட்டனள்.

மதகு நாசிசேர் மாமு கத்தினள்
கதலி காயமேற் கறங்கு செய்கைபோல்
விதலை மேற்கொளா விழும மோங்கியே
பதலை போன்றுளம் பதைக்கும் பான்மையாள்.

அவத்தை யெய்திய வசுவ சுந்தரி
தவத்தை மேவுறு தன்மை யெய்தினள்
சிவத்தை மேவுறுர் திருவி ழந்துமுற்
பவத்தை மேவியே பரிதல் பண்பரோ.

மருங்கின் மேலவன் மரபின் மேலவன்
மருங்கொன் றன்றியே மற்றுமங் கங்கள்
சுருங்கித் தேய்வுறத் தூங்கு செய்கையை
யொருங்கு தேர்கிலர் ளொன்று தேர்குவாள்.

ஆவ தாகிய வலக்க ணெய்துவா
ஞெவை நீக்குமா றொன்க ழற்படு
மூவர் தேவரின் மன்னர் மூவரும்
பாவி வைகுழிப் பரிந்து நண்ணினர்.

வந்த மன்னரை மாது தாள்பணீஇ
நொந்து துன்புற நொதும லாகவே
தந்த மன்னரு மவளை நோக்கியே
யுந்து மண்பொடு முரைத்தன் மேயினர்.

கோழிக் கோன்மகள் கோண மாமுகங்
கோழிக் கேதனன் கொற்ற நோன்பினை
யூழிற் சாகையி னுள்ள மாமுறை
காழிற் செய்திடிற் கடிதி னேகுமே.

# மாவிட்டபுரம்
# கந்தசுவாமிபேரிற்
# சொல்லிய
# தோத்திரப் பாமாலை

கைதடி
பொன்னம்பலவாணர் சபாபதிப்பிள்ளை

### ஆறுமுகசுவாமி, தேவிமார்

ஊறுதேன் துளிக்குஞ் சொன்னவொளி மலர்கொளைந்
    தருவ துடையோன் விண்ணோர்
பேறுடைய முனிவரரை வருத்துந்தீய பிரமன்றன்
    பௌத்திரனைப் பிளந்து வேலால்
மாறிலா மாவிட்ட புரத்திலுற்ற வசந்தமணி
    மண்டபத்தின் மயிலின் வைகு
மாறுமுக முடையபிரா னரிவைமார்க ளழகுறுதா
    டனையகத்தி லடக்கு வாமே.

### வைகாசி மணவாள உற்சவம்

செங்கதிரோன் விடையூர்தி தன்னி லேறித்
    தென்றல்மிக வீசுவை காசி யென்னும்
மங்கலஞ் சேர்மதியில் சுவாதி யென்னும்
    மன்னுதினந் தன்னில்மாலை யறுமு கத்தான்
பொங்குசங்க மாதியபி டேகம் பெற்றுப்
    புள்ளிமயி லூர்ந்துபுழைக் கையன் றந்தை
மங்கையுமை மருங்குகளில் மேவ வேநன்
    மணவாள வுற்சவமாம் வந்து பாரீர்.

---

முதற்பதிப்பு - 1913. (சென்னை, வித்தியாநுபாலனயந்திரசாலை) இந்நூலில் மாவையம்பதியில் நிகழும் உற்சவங்கள் பற்றிய குறிப்புகளைக் கூறும் 130 விருத்தங்கள் உள்ளன.

நூலாசிரியரின் குருவணக்கமும், அ. குமாரசுவாமிப்புலவரின் வாழ்த்தும் நூலின் இறுதியில் உள. பிரதி யாழ். வளாக நூலகத்திலுண்டு.

உ

# மாவைச் சுப்பிரமணியசுவாமிபேரில் தோத்திர விருத்தம்

ஆசுகவி
க. வேலுப்பிள்ளை

என்முகம் பாரா திருப்பதற் கேழைநா
னென்னகுறை செய்ததந்தோ
யாதானு மொருகுறை யிருப்பினும் மன்னிப்ப
தெந்தையுன் கடமையலவோ
புன்புலால் மதுவுண்டு நிரயவழி மால்புகுது
புலையருற வன்றிஞானம்
போதிப்ப வர்க்குநீ நண்புடைய னல்லவே
போந்தமுன் வினைவசத்தால்
என்பையெனி லச்சுமை சுமந்திறக் கிக்கடைத்
தேறுநா ளெந்தநாள்நான்
எவருக் குரைத்தழுவ திக்கலி யுகத்தினி
யேயிறைவ னென்கிலையா
பொன்குலவு தெய்வானை குறவள்ளி கணவமுப்
புரதகன சிவகுமரசீர்
பொலிகாவை யுறுமாவை நகர்வாச முருகேச
புகழாறு முகதேவனே.

---

பதிக அமைப்பிலுள்ள இந் நூலின் மூன்று விருத்தங்கள் சுப்பிரமணியசுவாமி பேரில் பக்திரசக் கீர்த்தனைகள் (1928 – பதிப்பாசிரியர்: க. வே. சாரங்கபாணி) என்ற நூலில் உள்ளன. ஏனையவை இரண்டாம் பாகத்தில் வெளிவரும் எனக் குறிக்கப்பட்டுள்ளது; வெளிவந்தமை பற்றிய செய்தி கிடைக்கவில்லை. 'சுதேச நாட்டியத்'தில் வெளிவந்திருக்கலாம். இக் கீர்த்தனைகள் 'ஆசுகவி'யின் ஆசானாகிய ஆவரங்கால் நல்லதம்பிப்புலவரால் (வித்துவான் நமசிவாயம்பிள்ளை) பாடப்பட்டன. பிரதி யாழ். வளாகத்திலுண்டு.

உ

# மாவைக் கதிர்காமவடிவேலர் பதிகம்

வருத்தலைவிளான்
க. சரவணமுத்துப்பிள்ளை

## காப்பு

வெண்பா

*மாவைக் கதிர்காம மன்னனடிக் கோர்பதிகப்
பாவைக்குந் தாரணியப் பாலிக்கும் — வாழ்வைக்
கருதடியார் போற்றைங் கரத்தான் மயிலை
மருதடிவாழ் வோன்றுள் மலர்.

## நூல்

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அன்புதரு நயனங்க ளீராறு மருள்பொழிய
அந்நிகர் கரங்களென்று
மம்முகக் குறிப்பினு லருண்முறை நடாத்தவே
அன்பரா நந்தமேவ
இன்பமுட னிருமருங் கும்வள்ளி தெய்வானை
யேகமாய் வீற்றிருக்க
இலைகொள்வேல் கைகொண்டு மயின்மீதி வர்ந்துசே
வற்கொடி பிடித்தலெங்கள்
துன்பமற நீலநிற வானமிசை ஞாயிறெழு
தோற்றமேய்க் கும்மென்பராற்
றூயதிரு மேனியது கண்டுபே ராநந்த
சுகவாரி தோய்வதென்றோ?
என்புருக வந்திதய செங்கமல மீதிலுறை
யென்சாமி குமரகுருவே
இதமாவை யுறுநர்த கதிர்காம வடிவேல
இனியமெய்ஞ் ஞானமணியே.

---

14ஆம் பக்கம் காண்க. *இக் காப்பு வருத்தலைவிளான் (தென் மயிலை) மருதடி விநாயகர்மேலது.

உ

# மாவை முருகன்

மாவிட்டபுரம்
க. சச்சிதானந்தன்

---

முருகா எனுமொழி செவிசென் றடைதலும்
பயமும் பகையும் பலவும் பறக்கும்
நயமும் நகையும் மலரும் முகத்தே
உள்ளம் இனித்துத் தேனாய் உருகும்
கள்ளம் போகும் கண்ணீர் சுரக்கும்
மணக்குங் கடம்பின் மலர்த்தா ரோனே
வணங்குந் தலையே கரங்கள் குவியும்
அரைகுறை யாக்கினும் அரகரா அமுதம்
ஆதியைத் தொட்டெனுள் சோதியிற் கலந்து
உள்ளம் கிளர்த்தி உவகைவெறி யேற்றி
விள்ளக் கண்ணீர் மேனிமயிர் பொடித்துப்
பதமலர் சிக்கெனப் பற்றவைக் கிறதே
வள்ளி மணாளா, வருக வருக
உள்ளம் கொண்ட கள்வா வருக
குறிஞ்சித் தலைவா குமரா வருக
மாயோன் மருகா மாவிட்ட புரத்து
மன்னு வள்ளி மணாளா வருக
மனக்குடில் வந்து எனைப்பெரி தாண்டென்
உள்ள வறுமை நீக்குவாய்
வள்ளலே கடம்பா வடிவே லோனே.

---

முதற்பதிப்பு - 1952. சில அடியார்கள் 'கட்டுவன்' என்னும் கிராமம் வழியாக மாவிட்டபுரம் வருகிறார்கள். அவர்களில் மூத்தவர் மாவை வளத்தை மற்றையோருக்குக் கூறுகிறார். ஈற்றில் யாவரும் கோவில் வாசலில் நின்று முருகனை ஏத்தித் தொழுவதாக இப்பகுதி அமைந்துள்ளது.

# மாவைக் கந்தசுவாமிபேரில் பத்திரசக் கீர்த்தனைகள்

மயிலிட்டி
சி. வேலுப்பிள்ளை உபாத்தியாயர்

இராகம் : பியாகடை — தாளம் : மிஸ்ரம்

பல்லவி

வேலுமயிலு மேன்
மேலுந் துணையல்லால்
வேறுந் துணைக ளுண்டோ. (வேலு...)

சரணங்கள்

(1) காலகாலன்பெற்ற கண்மணியேயுற்ற
கடுவினைபொடி படநொடிவரு
கந்தாவுமை மைந்தாவொரு (வேலு...)

(2) ஆர்கலியஞ்சவின் ஞேர்கலிமிஞ்சவெண்
ணறுமசுரர்க ளழிதரவயி
லெறிதருசிவ குருபரகுக (வேலு...)

(3) முண்டகமேலிருந் தண்டங்களைத்தந்த
மூவாமுழு முதல்வாவறு
முகவாவெகு தயவாய்வரு (வேலு...)

(4) மூவர்முறைவரு மாவையுறைதரு
முருகாதிரு மருகாகதி
மூழ்கப்பவ மானத்திதி (வேலு...)

---

முதற்பதிப்பு - 1928. இந்நூல் மயிலிட்டி பெரும்பரப்பு விக்கினேஸ்வரர் ஆலயத் திருப்பணி நிதிக்காக வெளியிடப்பட்டது. இந்நூலில் 35 கீர்த்தனைகள் உள்ளன. இராக, தாளங்கள் பற்றிய குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன. கீர்த்தனைகளின் ஆரம்பத்தில் வெண்பா, விருத்தம் அல்லது கலித்துறையொன்று தரப்பட்டுள்ளது. மயிலை விநாயகர் கீர்த்தனை வழிபடு கடவுள் வணக்கமாக உள்ளது. சி. கணேசையர், ச. பொன்னம்பலபிள்ளை, க. சோமசுந்தரப்புலவர், தெ. அ. துரையப்பாபிள்ளை, வண்ணை வை. இராமநாதன், க. வைத்திலிங்கம்பிள்ளை, சு. நவநீதகிருஷ்ணபாரதியார், சு. வேலுப்பிள்ளை ஆகியோர் சிறப்புரை வழங்கியுள்ளனர்.

# மாவைக் கந்தன் கீர்த்தனைகள்

யாழ்ப்பாணம்
ந. சிவப்பிரகாசன்

பல்லவி

மாவையில் வேலனே காட்சி — தந்திடாய்
மனமருள் மாட்சி (மாவை...)

அநுபல்லவி

மாமயில் வாகன சூட்சி — சொல்லுவாய்
மாயையின் மீட்சி (மாவை...)

தொகையறு

மகமேரு வென்றதோர் மலையை மாங்கனி
வருக்கவே வலம்வந்தவா
மலரேறு மெம்பிதா வைச்சிறை யேற்றியே
மகிழ்ந்த மாவைக் கந்தனேவா.

பல்லவி

தில்லையிலம் பலவனீசன் — சேவடி
சேருமுரு கேசன் (தில்லை...)

அனுபல்லவி

செல்வக் குமரையனின் தாசன் — செந்தமிழ்ச்
சிவப்பிர காசன் (மாவை...)

---

முதற்பதிப்பு - 1925. இந்நூலில் எட்டுக் கீர்த்தனைகள் உள. இவை பாடல் மெட்டுக்களின் அடிப்படையில் யாக்கப்பட்டுள்ளன.

உ

# நகுலமலைக் குறவஞ்சி நாடகம்

அராலி
பிரம்மஸ்ரீ நா. விஸ்வநாதசாஸ்திரிகள்

**காப்பு**

விருத்தம்

சீர்பூத்த மலர்க்கடப்பந் தெரியல்புனை முருகனடி சிரமேற் சூட்டி
ஏர்பூத்த நகுலமலைக் குறவஞ்சி தமிழ்மொழியா லினிது பாட
வார்பூத்த கும்பமுலை மலைமாது பெற்றெடுத்த மதிவெண்
கோட்டுக்
கார்பூத்த மதிற்கோவிற் கடவைவளர் தந்திமுகன் காப்ப தாமே.

வெண்பா

வானமுறு தேவர்களும் வண்புனமுந் தற்கோல
மானவெழில் காட்டுநகு லாசலாமே — மானமுறு
காலா யுதமெடுத்த கார்த்திகையான் சூர்தடிய
வேலாயுத மெடுத்தான் வெற்பு.

தோடயம்

மரகத ரத்தினப் பொற்சோதி வீசு
மயிலை யுகைத்துச் செல்வீர வீரர்
குரவணி வெற்றிக்கை வேலர் மீது
குறவஞ்சி பாடப்
புரதக னத்தைச்செய் சூர ராதி
புதல்வ ரெனப்பெற்ற ஞான தானக்
கரதல வத்திரத்தைச் சேரு மாவைக்
கணபதி தாள் துணையே.

---

முதற்பதிப்பு – 1895

குறவஞ்சி: "ஒரு குறத்தி குறி கூறுவதும், குறவனுடன் பேசி அளவளாவுவது மாகிய செய்திகள் தலைமைபெறப்பாடும் பிரபந்தம் குறவஞ்சியாகும். வெண்பா, தரவு, கொச்சகம், கலித்துறை, கழிநெடில்விருத்தம், இவைகளிடையே சிந்து முதலிய நாடகத்தமிழாற் பாடுவது." ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் பக். XXV

மாவை முருகனின் மலையாகிய நகுலமலைமீது பாடப்பட்டது.

கடமுனி சித்தத்துப் போத ஞானக்
கடலை யிருத்திப் பற்றேடு மாதிக்
குடலைதனைச் சொற்ற சாமி மீதிற்
குறவஞ்சி பாட
படவர வத்துப் பொற்பூணு நூலார்
பகைவர் புரத்தைச் செற்றுடல் கூடு
நடன பதத்துக் கோணேசர் பாத
நயந்து தொழுவேனே.

நூல்

கலித்துறை

மந்தியினுக் கறுகாலும் வளைப்புலிக் கஞ்சுகையுந்
தந்தியினுக்கு நால்வாயும் முக்கோடு தவத்தருக்கும்
இந்துவினுக்கிரு சென்மமும் வாசவற்கே யொர்கண்ணும்
அந்தநகு லப்பொருப்பி லுண்டாகு மதிசயமே.

கொச்சகம்

நத்தூரு மாவைவயல் நாதர்மணி மஞ்ஞையிற்கால்
வைத்தூரு மாமுருகர் வாழுமலை நன்ஞுட்டின்
முத்தூரு மென்னகையன் மூடுகொங்கைச் செப்பில் வைத்த
கத்தூரி வாடைநின்று கைம்மயக்கம் பண்ணுதையே.

கலிப்பா

சீர்ம விந்திடு மாவைநல் லூரனே
சித்திர வண்ணம தானம யூரனே
பார்ம விந்திடு ரூபநற் றூரனே
பத்தருக் கருள் பண்ணுமுத் தாரனே
பேர்ம வித்தவி சாகநன் ஞளனே
பெண்கள் வள்ளிதெய் வானைம ணுளனே
ஏர்ம விந்திடு பன்னிரு கையனே
யெம்மை யாண்டுகொள் வாய்முரு கையனே.

# மாவைப் பள்ளு

பண்டிதர், கலைமாணி மு. கந்தையா

## காப்பு

சிந்து

உள்ளப் பண்ணையி னோங்குமத
வெள்ளம் பொழிந்து வெண்ணுதிக்
    கோட்டுக் கலப்பை விளையாட்டா
    மாட்டி யுழுது
தெள்ளித் தெறிக்கும் மனமும் புத்தியுங்
கொள்ளக் குழைந்தொன் றாகவே
    சேறு மிதித்துத் தெய்வப்பயிர்
    நாறு பதித்து
கள்ள ஐம்புலக் கான யானை
துள்ளி யோடத் துரத்தியே
    விழைதக விற் காமமுதற்
    களைக ளைந்து
உள்ளுறுசிவ போகக்கதிர்
மெள்ள விளைத்துக் காத்தருள்
    தெய்வக்களிற் றின்கழலே
    சேர்ந்திடு வோமே.

கலிப்பா

வெள்ளக் கருணைபொழி வேழமுகத் தைங்கரனார்
உள்ளத் திருக்க உலகியிய லாததிலை
கள்ளக கலிநுழையாக் காண்பினிய நன்மாவைப்
பள்ளுக் கவனருளே பாங்காம் பயமினியேன்.

---

ஆக்கம் - 1967. இதுவரை அச்சில் வெளிவரவில்லை.

பள்ளமான நிலத்தில் (மருதம்) பயிர்செய்து வாழும் பள்ளரின் வாழ்க்கையைச் சித்திரித்துக்காட்டும் இலக்கியவகை பள்ளு ஆகும். இது உழத்திப் பாட்டு என வழங்கப்பெற்றது. 'உழத்திப் பாட்டாகும்; பள்ளுமென்பர்.' என்பது நவநீதப் பாட்டியல். வள்ளல்கள் அல்லது கடவுளின் புகழ்பாடி ஊடே உழவின் பெருமை பள்ளுக்களில் எடுத்துக்கூறப்படும்.

இப்பள்ளு மாவை முருகனைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரின் அருட்டிறமையை எடுத்தோதும் தேவபாணியாய்த் தெய்வ வாழ்த்துக்கூறும் இலக்கியமாக அமைந்துள்ளது.

## தெற்கணக்குக் கூறல்

பத்தி மெய்ந்நெறிச் சுந்தரர்க் காகமுன்
பரவைக் குய்த்தது பன்னூறு கோட்டை
கொத்தி ரண்டு தலைக்குக் கொடுத்திடும்
கூப்பன் முன்பு தடைப்பட்ட ஞான்று
சத்தி யாக்கிர கத்தொண்டர் வந்து
தண்டிப் போனது மாயிர நூறு
மெத்து பேரருள் வேலவ ஞாருள்
விளைவு மொன்று விளம்புவ னுண்டே.

## கிரகங்கள் மீளல்

பிரமனைச் சிறைசெய் திட்ட பெரியவன் மாவைத் தேவன்
வரன்முறை வினவின் யாமும் வன்சிறைப் படுதல் திண்ணம்
உரனுறு மிரும்புக் கூடும் ஒன்றவ னுண்டு கண்டோம்
பரனவன் வெகுளு முன்னம் பணிமிசைச் செல்வ மென்றே.

## இந்திரன் சீற்றம்

மருகனூர் மாவையிலே மழைபெய்யா தவமதித்திதிங்
கொருமாம ஞமெனக்கு முதாசீனப் பழிவிளைத்த
கருமுகில்காள் வம்மெனக்கூய்க் காற்றளையிட் டிந்திரனும்
உருகெழுபே ரச்சமுற உறுக்கியடித் தெச்சரித்தான்.

## கவிக்கூற்று

முரசிருக்கும் முன்கடையார் மூவேந்தர் அரவணைப்பிற்
பரசிருக்கும் நிலைவாய்ந்து பாரெல்லா மாண்டதமிழ்
சரசிருக்கச் செல்விமகிழ் தனிமாவை நன்னாட்டில்
அரசிருக்குங் காலமினி அணித்தேயோ சேய்த்தேயோ.

உ

# முத்தக பஞ்ச விஞ்சதி

சுன்னாகம்
முத்துக்குமாரகவிராயர்

[1]கோவிற் கடவைக் குருபரனை றுற்சவத்தைச்
சேவித்து நிற்பார் தெருத்தோறுங் — காவிச்செலும்
காவடியைக் கண்டிருப்பார் காண்பாரோ கூற்றுவனார்
தாவடிஏ முஞ்சுமைமயைத் தான்.

[2]கார்படியு நகுலகிரித் திருக்கோயிற் கடவையினார்
கடவுஞ் செம்பொற்
றேரடியிற் பின்னடியார் திருக்கூட்டத் துடன்வலமாய்த்
தெரிசிப் பார்கள்
ஓரடிக்கோர் பரிமகப்பே றடைவருடம் பாலுருள்வா
ருற்ப வத்தின்
வேரடியுங் கடந்துகந்த வேளடியின் முத்திசென்று
மேவு வாரே.

**(நாமாந்தரிதையெனும் பிரகேளிகைச் செய்யுள்)**

[3]மல்லாக மாதலான் மருகன்சுன் னாகத்தான்
மகன்பா வாணர்
சொல்லாச்சீ ரிவினையர்ன் துன்னலை யானத்தான்
சுரும்ப ரோதிச்
சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா மத்தனைச்
சிகண்டி மாவூர்
வல்லானை மாவிட்ட புரநகரத் திடைப்பவனி
வரக்கண் டேனே.

---

முதற்பதிப்பு - 1907. (சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர்) 1952இல் மூத்துக்குமாரகவிராயர் பிரபந்தத் திரட்டு (கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை) என்ற பெயரோடு பிறபாடல்களும் சேர்த்து வெளியிடப்பட்டது. கவிராயரின் தனிப்பாடல்களைக் கொண்ட நூல்.

1. இது மாவிட்டபுரம் கந்தசுவாமி பவனிவருதலைக் கண்ணுற்றபோது கூறிய ஆசிரிய விருத்தம். இதன்கண் நாமாந்தரிகையென்னும் பிரகேளிகை அமைக்கப் பட்டிருக்கிறது. பிரகேளிகையாவது, கருதிய பொருளைச் சூழ்ந்து கிடக்குமாறு மறைத்துவைத்து வெளிப்படையிலே வேறொன்ருகத் தோன்றும்படி விநோதமுறச் செய்யப்படுஞ் செய்யுள். நாமாந்தரிகையாவது கருதிய பொருளை வேறு நாமங் களிலே மறைத்துவைப்பது. மல்லாகம், மாதகல், சுன்னுகம், ஈவினை, துன்னலை, சில்லாலை, கொடிகாமம் என்னும் ஊர்ப் பெயர்கள் ஏழும் கருதிய பொருளை மறைத்திருக்கும் நாமாந்தரங்கள். இங்கே மறைத்துவைக்கப்பட்ட பொருளைக் கூறுதும் :

மல்ஆக மாதுஅகலான் மருகன் - வலிய மார்பிலே ஸ்ரீதேவியகலாதிருத்தலை உடைய நாராயணக் கடவுளுக்கு; மருகன, சுன்னுகத்தான - கைலைமலை வாசர் ஆகிய சிவன் (சுல் - வெள்ளி; நாகம் - மலை); சீர் ஈவினையான் - செல்வங் கொடுக்குஞ் செயலுடையவன்; துன்னலையான் அத்தான் - மன்மதன் மைத்துனன்; சில்லால் ஐ இருள் வென்ற - தகட்டணியால் வியக்கப்படுமிருளையும் வென்ற; குறக்கொடிகாமத்தான் - வள்ளிநாயகியின்மேல் விருப்புடையவன்.

- ஈழநாட்டுப் புலவர் சரிதம், சி. கணேசையர், பக். 45-46.

"முடிவிலாதுறை சுன்னுகத்தான்......" என்ற பாடலும் மாவை முருகன்மீது பாடப்பட்ட நாமாந்தர பிரகேளிகைச் செய்யுளாகும்.

2. இது மகாவித்துவானுகிய சேனுதிராச முதலியார் முதலடியும் கவிராசர் மற்றை மூன்றடியுமாகப் பாடிய விருத்தமென்பது கர்ணபரம்பரை.
நகுலகிரி - கீரிமலை,

3. கோவிற்கடவை என்பது மாவிட்டபுரத்திலே சுப்பிரமணியக் கடவுள் கோவில் கொண்டு வீற்றிருக்கும் ஸ்தானம். தாவடி - தாவுகிற பாதம். ஏழஞ்சுமை - எருமை. இது சங்கியாதை என்னும் பிரகேளிகை. எருமை என்பதினிலே எகரத்தினை ஏழென்றும் ருகரத்தினை அஞ்சு என்றும் இலக்கத்தைப்பற்றி மறைத்துக் கூறினர்.

— முத்துக்குமாரகவிராயர் பிரபந்தத்திரட்டு,
அ. குமாரசாமிப்புலவர் பக். 5.

# மாவைப் பதிகம்

பூநகரி
முருகேசர் கனகசபை

## காப்பு

பின்முடுகு வெண்பா

சந்திரமௌ லிப்பெருமான் றன்குமரன் மாவையில்வாழ்
கந்தனின்மே லிப்பதிகங் கட்டுரைக்க — முந்துதித்த
பானைவயிற் ருனைமதிப் பாதிமருப் பானைமதத்
தானைமுகத் தானை நினைப் பாம்.

## நூல்

திருமருவு மரமகளிர் கவரிகர மிசைகொண்டு
செயமுற விரட்டிநிற்ப
திசையமரு முதல்வர்குடை கொடிகவரி ஆதியன
செங்கரந் தாங்கிநிற்ப
உருமருவு மொளிவளை தனைப்பானு கம்பனுல
குளர்வெருவ வாயினூத
ஓதுநந் தித்தலைவர் கைப்படைக டாங்கியே
யுயர்காவல் செய்துநிற்க
குருமருவு முதயமா வலரிகுடி கொண்டெனக்
குழையொளி தவாதுவீசக்
குறவர்தரு மாதுகுஞ் சரமாது மத்தியிற்
கோலமுற நின்றவருளே
மருமருவு கவினுரும் மாருதப் பிரவல்லி
மாமுகம கற்றுபுரமாம்
மாவைநகர் மேவுசிவ ரூபகும ரேசபுனை
வாகைவடி வேல்வரதனே.

---

ஆக்கம்: 1887.

ஏடு முழுமையாகப் படியெடுக்கப் படியெடுக்கப்படாதுள்ளது.

ஏடு யாழ். வளாக நூலகத்திலுண்டு. புலவரின் புதல்வர் செ. பேகைாசன் தமது நினைவிலிருந்து வேறு பாடலை இதன் பதிகமாகக் குறிப்பிட்டுள்ளார் (1938). அது வருமாறு:

மண்பரவு மாவைநகர் வாழ்கந்த வேடன்மேற்
பண்பரவு நற்பதிகஞ் செப்புதற்குத் — திண்புவியில்
அத்திமுகத் துத்தமனை யற்புதமு கக்களிறை
வைத்துமனம் நித்தநினை வாம்.

பின்னிணைப்பு I

## மாவை முருகன் கவிமலர்கள்

### 1. மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம்

சுன்னுகம், அ. முத்துக்குமாரகவிராயர்

*கவிராசரின் பாடல்கள் சுன்னுகம், அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களால் தொகுக்கப்பட்டு முத்தக பஞ்ச விஞ்சதி என்ற பெயரோடு 1907இல் வெளியிடப்பட்டன. புலவர் பாடல்களுக்கு உரைக் குறிப்புக்களும் தந்துள்ளார்.*

*முத்துக்குமாரகவிராயர் பிரபந்தத் திரட்டு என்ற பெயரில் கவிராயரின் தனிப் பாடல்கள், தொகைகள் என்பவற்றைத் தொகுத்து 1952இல் புலவரகம் கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ளார்.*

### 2. மாவைக் கந்தசுவாமி பேரிற் பாடிய ஊஞ்சற் பாக்கள்

நல்லூர் ம. சரவணமுத்துப்புலவர்

### 3. மாவைக் கலிவெண்பா

சுன்னுகம், அ. குமாரசுவாமிப்புலவர்

### 4. மாவைச் சுப்பிரமணியர் தோத்திர விருத்தம்

புன்னாலைக்கட்டுவன், வித்துவசிரோமணி, சி. கணேசையர்

இந் நான்கும் 'மாவிட்டபுரத் திருத்தல வரலாறு' என்ற நூலிலும் இடம்பெற்றுள்ளன.

### 5. மாவைச் சுப்பிரமணியக்கடவுள் பதிகம்

யாழ். மாவிட்டபுரம் குமாரசுவாமிக்குருக்கள்

*காப்பு வெண்பா, வாழ்த்து உட்படப் பன்னிரு பாடல்கள் உள. சுவாமிநாத பண்டிதரவர்களின் சிறப்புப்பாயிரம் கொண்டது.*

*முதற் பதிப்பு: சென்னை, சைவவித்தியாநுபாலன யந்திரசாலை 1914.*

*இரண்டாம் பதிப்பு: மாவை, வேதாகம நூல்நிலைய வெளியீடு - 1965.*

6. சித்திரகவித் திருவிரட்டை மணிமாலை என்னும்
**மாவைத் திருவிரட்டை மணிமாலை**

தெல்லிப்பழை, தா. மு. பூ. பொன்னம்பலபிள்ளை

*காப்பு வெண்பா உட்பட இருபத்தொரு பாடல் கொண்டது. இந் நூல் கூடசதுர்த்தம், பிறிதுபடு பாட்டு, இரட்டைநர்கபந்தம், விஞவுத்தரம், திரிபங்கி, கர்லதை கரப்பு, சக்கரபந்தம், திரிபாகி, மாத்திரைச்சுருக்கம், எழுத்துவருத்தனம், அக்கரசுதகம், கரந்துறைச்செய்யுள், மாலைமாற்று, தேர் வெண்பா (கூடசதுர்த்தம்) முதலிய சித்திரகவிகளைக் கொண்டது.*

7. **ஆறெழுத்துப்பத்து**

தெல்லிப்பழை, தா. மு. பூ. பொன்னம்பலபிள்ளை

*ஆறுவரிப் பாடல்கள் பத்துக் கொண்டது. ஒவ்வொரு பாட்டிலும் வரிகள் ஆறும் முறையே ச, ர, வ, ண, ப, வ என்ற எழுத்துக்களைக் கொண்டு ஆரம்பிக்கின்றன.*

**இவ்விரு நூல்களும் ஒன்ருகப் பதிக்கப்பட்டுள்ளன. நூல் ஆசிரியரின் மாணுக்கர் மு. வல்லிபுரநாதஞரின் சிறப்புப்பாயிரம் கொண்டது.**

*முதற் பதிப்பு: நியாயதுரந்தரர் பொ. சின்னக் குட்டிப்பிள்ளை - 1887.*
*வண்ணை, மெய்ஞானப்பிரகாச யந்திரசாலை.*

*இரண்டாம் பதிப்பு: கொல்லங்கலட்டி, அ. சின்னத் தம்பி - 1962.*
*தெல்லிப்பழை, குகன் அச்சகம்.*

*இரண்டாம் பதிப்பு பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்களின் குறிப்புரை கொண்டது.*

8. **மாவைப் பிள்ளைத்தமிழ்**

பண்டிதர், கலைமாணி மு. கந்தையா

*மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்ற வெளியீடு - 1967. சைவத்தமிழ்த்திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் அணிந்துரை கொண்டது. விரிவான உரைவிளக்கக் குறிப்புகளுடன் அச்சிடப்பட்டுள்ளது. முருகன் பெருமை மட்டிலன்றித் தல*

மகிமைக்குரிய பல்வேறு கருத்துக்களும் இந்நூற் கவிதைப் பொருளாயமைந்திருக்கின்றன.

**9. மாவிட்டபுரம் தண்டபாணிக் கந்தன் திருப்பதிகமும் தோத்திரப்பாமாலையும்.**

அளவையூர், அருட்கவி சீ. விநாசித்தம்பி

---

பின்னிணைப்பு II

## பிரதிகள் பெறமுடியாத அல்லது அச்சிடப்படாத நூல்கள்

**1. மாவை ஊஞ்சல்**

இருபாலை, வித்துவசிரோமணி சேனாதிராசமுதலியார்

**2. மாவைப் பதிகம்**

இருபாலை, வித்துவசிரோமணி சேனாதிராசமுதலியார்

*வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்கள் ஈழநாட்டுப் புலவர் சரிதத்தில் (ஈழகேசரி, நா. பொன்னையா பதிப்பு பக். 32 - 1939) "மாவிட்டபுரம் சுப்பிரமணியக் கடவுள் மீதும் ஊஞ்சல், பதிகம் முதலியனவும்...... பாடினரென்ப" என்று கூறியுள்ளார்.*

*முதலியாரின் நல்லை வெண்பா (யாழ். செந்தமிழ்ப் பதிப்பக வெளியீடு - 1942) நூலாசிரியர் வரலாற்றில் (தென்கோவை க. முருகேசபிள்ளை) "மாவைச் சுப்பிர மணியக் கடவுள்மீது ஓர் ஊஞ்சற் பதிகமும்...... இயற்றப் பட்டுள்ளன", என்று குறிப்பிடப்பட்டுள்ளது (பக். v). பதிகம் பற்றிய குறிப்பில்லை.*

**3. மாவைப் பதிகம்**

மயிலிட்டி, சி. வேலுப்பிள்ளை உபாத்தியாயர்

*இந்நூல் அச்சில் வந்ததாகத் தெரியவில்லை. இவரது படைப்புக்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் உறவினர்க்கு இந்நூல் பற்றி எதுவும் தெரியவில்லை. பிரதி எவரிடமும் இருப்பதாக அறியமுடியவில்லை.*

**4. மாவைக் கந்தர் சிங்காரம்**

வறுத்தலைவிளான், க. மயில்வாகனப்புலவர்

"இவற்றுட் பின்னைய மூன்றும் (மாவைக் கந்தர் சிங்காரம், சாவித்திரி சரிதை, திருநீலகண்டநாயனார் விலாசம்) இன்னும் அச்சிட்டு வெளிவராதன" என மாவைக்கந்தரகவல் (யாழ். நாவலர் அச்சுக்கூடம் - 1931) முகவுரையில் நூலாசிரியரின் புதல்வி திருமதி அமுதாம்பிகை செல்லையா குறிப்பிட்டுள்ளார். வெளிவந்ததாகத் தெரிய வில்லை. பிரதியைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

**5. மாவைக் கந்தரஞ்சலி**

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை

வெளிவந்தமை பற்றிய விபரம் அறியமுடியவில்லை. பிரதியைப் பெறமுடியவில்லை.

**6. மாவைக் கந்தர் தோத்திர மாலை**

விசுவகலாமணி, பண்டிதர் இ. சி. கந்தையா ஆச்சாரியார்

தமிழர் திருமணத்தில் தாலி என்ற நூலில் வெளிவர உள்ள நூல்களின் பட்டியலில் இதுவும் இடம்பெற்றுள்ளது.

---

பின்னிணைப்பு III

## மாவை தொடர்பான பிற நூல்கள்

(**அ**) **வரலாறு**

**(1) மாவிட்டபுரத் திருத்தல வரலாறு**

மாவை, பிரமசிறீ சு. து. சண்முகநாதக்குருக்கள்

குரும்பசிட்டி சன்மார்க்கசபை வெளியீடு - 1965.

மாவிட்டபுர வரலாற்றை விபரிக்கும் நூல். பின்னிணைப்பு 1 இற் குறிப்பிட்ட நூல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

**(2) கோயிற் கடவை**

மாவை, பிரமசிறீ எஸ். சுந்தரராசசர்மா (1966)

*கீரிமலை, காங்கேசன் துறை ஆகிய இடங்களோடு தொடர்புபடுத்தி மாவிட்டபுரத்தின் வரலாற்றை எடுத்தோதும் நூல்.*

**(உ) நாடகம்**

**வாழ்வு பெற்ற வல்லி**

கலைமாணி த. சண்முகசுந்தரம்

*மாவிட்டபுரம் மகாவித்துவான் கணேசையர் சங்க வெளியீடு - 1962.*

*மாருதப்பிரவல்லி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த நாடக நூல். இந்நூல் சாகித்தியமண்டலப் பரிசு (1962) பெற்றது.*

---

பின்னிணைப்பு IV

## மாவை பற்றிய
## வரலாற்றுச் செய்திகளைக்கொண்ட நூல்கள்

**1. கைலாய மாலை**

முத்துராசகவிராயர்

*திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையின் (2ஆம்) பதிப்பு - 1939.*

**2. வையா பாடல்**

*உக்கிரசிங்கன் - மாருதப்பிரவல்லி வரலாறு கூறும்.*

**3. மட்டக்களப்பு மான்மியம்**

வித்துவான் பி. சே. சே. நடராசா பதிப்பு

*கொழும்பு கலாநிலையம் - 1962.*

*இந் நூலிலுள்ள ஆடகசவுந்தரி வரலாறு மாருதப்பிரவல்லி வரலாற்றுடன் ஒப்பிடற்பாலது.*

4. **நகுலகிரிப் புராணம்**

கவிஞர்சிகாமணி பிரமசிறீ கா. அப்பாச்சாமிஐயர்

கீரிமலை இந்துசமய விருத்திச் சங்கப் பதிப்பு - 1961.

இந் நூலில் மாருதப்பிரவீகவல்லி யாத்திரைப் படலத்தில் 48 பாடல்களில் மாவைபற்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது (பக். 77-83).

5. **நகுலாசல புராணம்**

மாதகல், சு. ஏரம்பையர்

இப் புராணப் பாடல்கள் இரண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தில் இடம்பெற்றுள்ளன (பக். 266). அச்சில் வெளிவரவில்லைப்போலும். பிரதி யாழ். வளாக நூலகத்தில் உண்டு.

6. **திரிகோணாசல புராணம்**

திருமலை, மாசிலாமணி முத்துக்குமாருப்புலவர்

இது வடமொழி மச்சபுராணத்தை முதனூலாகக் கொண்டெழுந்தது. ஈழத்துத் தமிழ்நூல் வரலாற்று (அரசு வெளியீடு - 1970) ஆசிரியர், வித்துவான் பி. சே. சே. நடராசா அவர்கள் இந்நூல் பற்றிக் குறிப்பிடுவது: ''தம்பைநகரப் படலத்திலே மாருதப்பிரவல்லி வரலாறு விரித்தோதப்படுகிறது. அவள் செய்த தலயாத்திரை கூறுமுகமாக ஈழத்தின் திருத்தலங்கள் பல எடுத்துரைக்கப்பட்டுள்ளன'' (பக். 130).

7. **ஈழமண்டல சதகம்** (சந்திரமௌலீசர் சதகம்)

உரையாசிரியர், மட்டுவில், க. வேற்பிள்ளை

மாருதப்பிரவல்லி வரலாறு 92ஆம் பாடல் முதல் 99ஆம் பாடல்வரை. சென்னை வித்தியாநுபாலனயந்திரசாலைப் பதிப்பு 1923, ஆவணி.

8. **சுப்பிரமணிய பராக்கிரமம்**

சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை

இந் நூலில் மாருதப்பிரவல்லி வரலாறு உண்டு. திருச்செந்தூர்ப் புராணத்திலும் இதனையொத்த வரலாறு உண்டு.

**9. யாழ்ப்பாண வைபவமாலை**

மாதகல், சு. மயில்வாகனப்புலவர்

*முதலியார் குலசபாநாதன் பதிப்பு - 1953.*

*இந் நூலில் மாவைபற்றிய வரலாறு உண்டு.(பக்.13-23)*

**10. யாழ்ப்பாண வைபவ கௌமுதி**

சுதேசநாட்டிய மனேச்சர், வசாவிளான், க. வேலுப்பிள்ளை

*ஜயசிறீ சாரதாபீடேந்திரசாலைப் பதிப்பு - 1918.*

*இந் நூலில் மாவை வரலாறும் (பக். 7 - 10) இடப்பெயர் ஆராய்ச்சியும் (பக். 131 - 132) உள்ளன.*

**11. யாழ்ப்பாணச் சரித்திரம்**

நாவலர்கோட்டம், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

*நாவலர் அச்சகப் (3ஆம்) பதிப்பு - 1933.*

*மாவை வரலாறு பக். 4-5இல் உளது.*

**12. யாழ்ப்பாணச் சரித்திரம்**

முதலியார் செ. இராசநாயகம்

*மாருதப்பிரவல்லி வரலாறு பக். 243 - 245.*

**13. யாழ்ப்பாண வைபவ விமர்சனம்**

வண. ஞானப்பிரகாச அடிகளார்

*தமிழரசர் உகம் பக். 6 - 19.*

*அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை - 1928.*

*இந் நூலில் மாருதப்பிரவல்லி கதை ஏனையவற்றில் இருந்து முரண்பட்டவகையிற் கூறப்பட்டுள்ளது.*

**14 இடப்பெயர் ஆராய்ச்சி**

திரு. எஸ். டபிள்யூ. குமாரசுவாமி

**15. யாழ்ப்பாண பூர்வீக வைபவம்**

திரு. கா. மதியாபரணம்

*நாவலர் அச்சகம் - 1927.*

*மாருதப்பிரவல்லி வரலாறு பக். 7 - 10.*

உ

தமிழ்ப் பேரறிஞர்

# வித்துவான், ந. சுப்பையபிள்ளை அவர்கள்

## மாவை முருகன் கவிப்பூங்கொத்து

நூல் தொடர்பாக வழங்கிய

# கருத்துரைகள்

பக். 3. 3ஆம் பாடல்: பாவகி - முருகக் கடவுளுக்குரிய பெயர் (திவாகரம்).

பக் 5. 8ஆம் பாடல்: கணி - வேங்கைமரம்.
தினைப்புனத்தில் வள்ளியெதிர் நின்ற வேடருபம் மாற்றி வேங்கை மரமாய் நின்றார்.

பக். 21. 2ஆம் பாடல்: வந்தித்தும் + அருளவேண்டும்.
வந்தித்தும் - வந்தனஞ் செய்தோம், வழிபட்டோம் (யாம்). [இது தன்மைப் பன்மை வினைமுற்று]

பக். 22. 3ஆம் பாடல்: சுதை - மகள். சுதைகள் - புதல்வியர்.
புவி புரப்பவன் சுதைகளறிவர் - காத்தற் கடவுளாகிய திருமாலின் புதல்வியர் அமுதவல்லி, சுந்தரவல்லி. இவர்கள் தெய்வயானையாகவும் வள்ளியாகவும் மாறி முருகற்குச் சத்திகளாயினர்.

4ஆம் பாடல்: மாதவன் - திருமால் வடிவைச் சிவலிங்கமாக்கிய அகஸ்தியர், மார்க்கண்டேயர்.

பக். 28. 4ஆம் பாடல்: பூளை - இலவம்பஞ்சு.

ப 29. 6ஆம் பாடல்: நில, மாதர், நிதி யாசை - மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை.

30. 7ஆம் பாடல்: ஆரணத்தலை - வேதசிரஸ், உபநிடதம்.

. 31. 9ஆம் பாடல்: மலர்வாகை யந்தமானே - வாகை மாலையையுடைய அழகிய மகானே. அந்தம் - அழகு; மான் - மகான்.

10ஆம் பாடல்: வரர்பயகரம், வர + அபய + கரம்- வரதகரமும் அபயகரமும். 'வரத' என்பது தொகுத்தல் விகாரம் பெற்று 'வர' என நின்றது.

பக். 41. 2ஆம் அடி : கந்து - உடம்பின் பொருத்து.
(ஐந்து முகத்தோடு அதோமுகமும் பொருந்திக் கைலாசபதியால் நெற்றிக்கட் பொறியிலிருந்து தோற்றுவிக்கப்பட்டு) உண்மையாற் பெற்ற ஸ்கந்தன் என்னும் பெயரோனே.
40ஆம் அடி : ஈழை - தொய்வு.

பக். 51. 3ஆம்பாடல் : முதற்சீரில் தானை - (வேற்) படை.
மாவைமன்னல்கைத்தானையால்-மாவை + மன் + நால் + கைத்து + ஆனை + ஆல். நால் + கைத்து + ஆனை - நாலு கின்ற கையையுடைய ஆனையாய் வந்த கணபதியால்.
உய்த்தானையாது - உய்த்தான் + ஐயாது.

பக். 53. 5ஆம் பாடல் : 'மாழ்குவான்', மாழ்குதல்-மயங்குதல்.

பக். 54. 5ஆம் பாடல் : பாவி - பழையதீவினையாள்.

பக். 62. 2ஆம் பாடல் : மந்தி - வண்டு.
அஞ்சு + கை - ஐந்து கரம்; அஞ்சுகை - அஞ்சுதல்.

2ஆம் அடி : முக்கோடு தவத்தருக்கும் - திரிபுண்டரம் சந்தியாவந்தன சிவலிங்க பூசகர்க்கு (1ஆம், 2ஆம் தீக்ஷை பெற்றவர்க்கு) கோடு - வரி; கீறு.

3ஆம் அடி : இந்துவினுக்கிரு சென்மம் - பிறை மேற்கில் உதித்தல்; பூரண சந்திரன் கிழக்கில் உதித்தல். சென்மம் - உதயம், தோன்றுதல். வாசவன் - இந்திரன் [ஆயிரங்கண்ணன்]

6-கால், 5-கை, 4-வாய், 3-கொம்பு, 2 பிறப்பு, 1-கண் இவை உளதாந்தன்மை அதிசயமாம். என வெளிப்படையாகத் தோன்றும் மயக்கப் (தி[illegible]) பொருள். இது பிரகேளிகையணிச் செய்யுள்.

பக். 62. 3ஆம் பாடல் : 4ஆம் அடி கை - பக்கலிலும் (நா[illegible] பக்கத் தூரத்தில்).